
(12)

1993

# வெளிச்சம்

பங்குனி - 199
20/




மார்ச் 8
அனைத்துலக
பெண்கள்
நாள்

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

# நியூ குமரன்
## கிறைன்டிங் மில்

மாவு அரைத்தல்,
மிளகாய் திரித்தல்,
நெல் குற்றல்.
உழுந்து, பயறு திரித்தல்



போன்ற வேலைகளைச் சிறப்பாகச் செய்ய வாருங்கள்

நியூ குமரன்
கிறைன்டிங் மில்

தொடர்புகளுக்கு:

# நியூ குமரன் கிறைன்டிங் மில்

சங்கரத்தை வீதி,
அராலி,
நவாலி.



பெண்ணே! கண்களைத் திற.
விழிநீரைத் துடைத்து எறி.
அதில் திரிபோட்டு விளக்கேற்று.
உலகம் உனக்குத் திறந்தவெளிச் சிறைச்சாலை.
விலங்கிடப்படாத கைதி நீ.
உனது விடுதலைக்குத் தேதி குறிக்கவில்லை.
''என்னை விடுதலை செய்''
என்றாவது 'மகஜர்' கொடுத்தாயா?
அதுகூட இல்லை.
வளையலும், மெட்டியும், கனகாம்பரமும்
உனக்கு வடிவுதான்.
அதனால்தானே,
சேலைக்கடைப் பொம்மை போலக்
காலம் கழிக்கின்றாய்.
எனக்குத் தாய்... இன்னொருவனுக்குத் தாரம்...
அடுத்தவனுக்கு அக்கா... மற்றவனுக்கு மகள்...
எத்தனை அவதாரங்களாகின்றாய்.
என்றாலும் அடங்கிய வாழ்வுதான்.
எத்தனை யுகங்களாக......
புல்லாகி, பூடாய், புழுவாகி, மரமாகி
செல்லாத வாழ்வு உனக்கு?
உன் ஊழிக்கூத்து எப்போது?



தமிழீழத் தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்

# தமிழீழத்தில் புதியபார்வையும் புதியவிழிப்பும் மலர்கிறது

*1993 மார்ச் 8 அனைத்துலக பெண்கள் நாளையொட்டி தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய செய்தி.*

எமது சமூகம் மாறிக்கொண்டிருக்கிறது. விடுதலைப் போராகவீசிக் கொண்டிருக்கும் வரலாற்றுப் புயல் எமது மண்ணில் காலம்காலமாக நிலைத்திருந்த பழைமைவாத விருட்சங்களை வேரோடு பிடுங்கி வீழ்த்தி வருகிறது. எமது மனக்குகையில் குடியிருந்த மூடநம்பிக்கைப் பேய்கள் விரட்டப்பட்டு வருகின்றன. எமது சமூகக் கருத்துலகில் புதியபார்வை மலர்கிறது. புதிய விழிப்புணர்வு தோன்றி வருகிறது. சமூக உறவுகளில் புரட்சிகரமான மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

எமது போராட்டத்தினுள் ஒரு போராட்டமாகப் பெண் விடுதலைப் போர் இன்று முனைப்புற்று வருகிறது. பெண் விடுதலை என்ற இலட்சியப் போராட்டமானது எமது விடுதலை இயக்கத்தின் மடியில்பிறந்த அக்கினிக் குழந்தை. அதன் வளர்ச்சியும் எழுச்சியும் ஒப்பில்லாத ஒரு தனிச் சரித்திரம். மண்ணின் விடிவிற்காகவும், பெண்ணின் விமோசனத்திற்காகவும் இன்று தமிழீழப் புரட்சிப்பெண் புலியாக மாறி விட்டாள். அநீதிக்கு எதிரான ஆவேச நெருப்பாக அவள் இன்று ஆயுதமேந்தி நிற்கிறாள். இந்த வரலாற்றுத் திருப்பத்திற்கு எமது இயக்கமே வழிசமைத்துக் கொடுத்தது.

சமத்துவத்தை நோக்கிய பயணமாக பெண் உரிமைப் போராட்டம் தொடர்கிறது. பாலியல் வேறுபாட்டின் அடிப்படையில் சமத்துவமற்ற சமூக உறவுகள் உருவாக்கம் பெற்றுள்ளன. எல்லாக் காலங்களிலும், எல்லா சமூகங்களிலும், எல்லா பண்பாட்டு வடிவங்களிலும் இந்த சமத்துவமற்ற மனித உறவு நிலவி வருகிறது. பெண்ணை தாழ்ந்த நிலைக்குத் தள்ளி விட்டிருக்கும் இந்த சமூக அநீதியை எதிர்த்து இன்று உலகப் பெண்ணினம் போர்க்கொடி உயர்த்தி நிற்கிறது.

பால் ரீதியான உடற்கூற்று வேறுபாடு என்பது இயற்கையின் திருவிளையாடலாக இன விருத்திக்கு அளிக்கப்பட்ட கொடை. உயிர்ப் படைப்பிற்காக சிருஷ்டிக்கப்பட்ட உடற்கூற்றின் அடிப்படையில் ஆணையும் பெண்ணையும் வேறுபடுத்தி சமத்துவமற்ற உறவுகளை சமூகம் பின்னி விட்டிருக்கிறது. பாலியல் வேறுபாடும், அதன் அடிப்படையில் தோன்றிய பண்பாட்டு நியமங்களும், அவை பெண் மீது பதித்து விட்ட படிமங்களும் பார்வைகளும் ஆண் - பெண் சமத்துவத்திற்கு முட்டுக்கட்டைகளாக நிற்கின்றன.

மனித ஆளுமை பாலியல் வேறுபாட்டிற்கு அப்பாலானது. ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பால் மனிதம் இருக்கிறது. அது மனிதப் பிறவிகளுக்கு பொதுவானது. இந்த மனிதத்தின் ஆற்றல்களை உடற்கூறு நிர்ணயிப்பதல்ல.

பெண்ணிடமும் மனிதம் இருக்கிறது. அதன் அற்புதமான ஆற்றல்களையும், அலாதியான பண்புகளையும் பாலியல் அளவுகோலால் நிர்ணயிக்க முடியாது. எதையும் பெண்ணால் சாதித்துவிடமுடியும் என்பதற்கு எமது போராட்டம் ஓர் உன்னத உதாரணமாகத் திகழ்கிறது.

பாலியல் வேறுபாட்டிற்குப் புறம்பாக, ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பாலான, இந்த மனிதத்தை இனம்கண்டு கௌரவிக்குமாறு பெண்ணினம் ஆணினத்திடம் அன்புக்கரம் நீட்டுகிறது. ஆழமான புரிந்துணர்வுடன் ஆணினம் இந்த அன்புக்கரத்தைப் பற்றிக்கொள்ளும் பொழுதுதான் ஆண் - பெண் சமத்துவம் சாத்தியமாகும்.

அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பு இன்று நடத்தும் தமிழீழப் பெண்கள் எழுச்சி வைபவத்திற்கு எனது நல்லாசியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

''நெஞ்சை நிமிர்த்து.
நிலவுக்குக் கைநீட்டு.
கொஞ்சி மகிழ்வதற்கு
குளிர் நிலவைப் பிடித்துக்கொள்.
உன்னால் முடியும்
உலகத்தைப் புரட்டிவிட
உன்னால் முடியும்
உன்னாலே முடியுமம்மா.''

அடக்கப்பட்டு, எத்தனையோ அழுத்தங்களுக்கு மத்தியில்தான் உலகம் எங்கணுமுள்ள பெண்கள் தங்கள் விடுதலைக்காகக் குரலெழுப்பிக் கொண்டிருக்கின்றனர். பெண் விடுதலை, பெண்களுக்கான சமநிலை, பெண்களுக்கான வாழ்வுரிமை என்றெல்லாம் உலகத்தின் அட்டதிக்குகளும் அதிர்கின்றன.

தமிழீழப் பெண்களும், உலக ஓட்டத்துடன் ஒத்திசைந்து தங்கள் உரிமைக்காக இன்று போராடத் தொடங்கிவிட்டனர். பெண்ணின் விடுதலையும், மண்ணின் விடுதலையும் ஒன்றோடொன்று கம்பும், படர் கொம்பும் போலப் பின்னிப்பிணைந்தவை. ஒரு நல்ல தலைவனின் கீழ், நன்கு திட்டமிட்டு, தூரப்பார்வையுடன் செப்பனிட்டு நடத்தப்படும் விடுதலைப் போராட்டம் வெற்றி பெறும்போதுதான் அந்நாட்டின் அடிமைத்தனங்களின் எச்ச சொச்சங்கள் இல்லாமல் தொலைந்துபோகும். தமிழீழமென்ற உயிரனைய எங்கள் இலக்கு வெல்லப்படும்போதுதான் தமிழீழப் பெண்கள் முழுமையான விடுதலையைப் பெறுவார்கள்.

எம்மை வழிநடத்திச் செல்வதற்கு பிரபாகரன் என்ற பெயரில் நல்ல தலைவன் கிடைத்தாகிவிட்டது.

சென்றடைய வேண்டிய இலக்கும் தெளிவாகிவிட்டது.

தலைவனை நம்பியும், தமிழீழ இலக்கின் தேவை கருதியும் தலையையும் கொடுத்துச் சமர்களமாடும் ஆண், பெண் போராளிகளும் அணிவகுக்கத் தொடங்கிவிட்டனர்.

எனவே, எம்மண் விடுவிக்கப்படும்பொழுது பெண்களும் விடுதலை பெறுவார்கள்.

பெண்களுக்கு யாரிடமிருந்து விடுதலை?

பெண்கள் எப்போது சிறைபிடிக்கப்பட்டார்கள்?

அப்படியொன்றும் அவர்கள் சுதந்திரம் பறிக்கப்பட்டதாகத் தெரிய வில்லையே.

இன்னும் என்னத்தை எங்களிடமிருந்து அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்?

என்றெல்லாம் கேலிகலந்த கேள்விகள் எழுகின்றன.

இந்தக் கேள்விகளே ஆணாதிக்க உணர்வின் ஆரம்பக் கட்டம்தான். வெறும் அழகுப் பதுமைகளாக, ஏவற்பணியாளர்களாக, சுகம் தரும் சுந்தரிகளாக, பெண்கள் இருக்கும்மட்டும் இந்த ஆணாதிக்க உலகம் பெண்களை அடக்குவது கண்களுக்குத் தெரியப்போவதில்லை. பெண்விடுதலை என்பது, பெண்கள் மட்டுமே சம்பந்தப்பட்ட சமாச்சாரமல்ல. ஒவ்வொரு விடுதலை விரும்பிகளும் சம்பந்தப்பட்டது. இன்று, கருவி ஏந்திக் களத்தில் நிற்கவும், கனரக வாகனங்களைச் செலுத்திச் செல்லவும், சமூகத்தின் பலதரப்பட்ட பணிகளிலும் முன்னின்று உழைக்கவும் தமிழீழப் பெண்கள் தங்களைத் தயார்ப்படுத்திக்கொண்டு விட்டார்கள். விடுதலை உணர்வு அவர்களின் நெஞ்சில் மூண்ட நெருப்பாகக் கனன்றுகொண்டிருக்கின்றது. இந்த நேரத்தில் மீண்டுமொரு அனைத்துலகப் பெண்கள் நாளான 'மார்ச்8' முகம் காட்டியுள்ளது. 'நாங்கள் விடுதலை பெறுவோம்' என்ற உணர்வு தமிழீழப் பெண்களுக்கும், நாங்கள் விடுதலையைக் கொடுப்போம் என்றும், விடுதலைக்காகப் போராடும் பெண்களின் போராட்டத்தை அவர்களுடன் இணைந்து முன்னெடுத்துச் செல்வோம் என்ற உணர்வு ஆண்களுக்கும் ஏற்படும் பொழுது விடுதலைக்குக் குந்தகமாக எந்தத்தடையுமே இருக்க முடியாது போய்விடும். உண்மையான விடுதலை இப்படித்தான் ஏற்பட வழியுண்டு. வெளிச்சம் இதற்காகத் தொடர்ந்தும் பணியாற்றும். □□

வெளிச்சம்

பங்குனி - 1993

இதழ் - 12

# இருளிலிருந்து எழுக!

புதுவை இரத்தினதுரை

எழுக என் தங்காய்! எழுக என் தங்காய்!
இருளினுள் ளிருந்து எழுக என் தங்காய்
மலையென நிமிர்க! மலையென நிமிர்க!
மாதவப் பேறே! மலையென நிமிர்க.

காலப் பெருவெளியில் கரிபடர்ந்த ஓவியமாய்,
நீளும் திசையெங்கும் நீகிடந்தாய்.
வரிசங்கம்;
ஊதி, உனையெழுப்ப ஒருவரின்றி,
நீள் துயிலில்;
பாதிவிழிதிறந்தும் பார்க்காமல் கிடக்கின்றாய்.
வெய்யில் உலர்ந்த விறகாகி,
அடுப்பெரிப்போர்;
கையில் அகப்பட்டுக் கரியாகிப் போகின்றாய்.
கண்ணிருந்தும் குருடானாய்.
காலிருந்தும் முடமானாய்.
வண்ண மொழியுதிரும் வாயிருந்தும்,
ஊமையெனப்;
பேச்சிழந்து நிற்கின்றாய்.
பெண்ணே! என் தங்காய்!
மூச்செழுந்தே வையமுகடை உடைக்க வல்ல;
வீரியத்தைக் கொண்ட வீசுபுயலே!
உனது
பேரியக்கம் புரியாமல்...
போட்டபடி கிடக்கின்றாய்.

எழுக என் தங்காய்! எழுக என் தங்காய்!
இருளினுள் ளிருந்து எழுக என் தங்காய்.
மலையென நிமிர்க! மலையென நிமிர்க!
மாதவப் பேறே! மலையென நிமிர்க!

கத்தரிக்காய் பொரிப்பதற்கா கையுனக்கு?
பிள்ளையது,
தொத்திக் கிடப்பதற்கா தோளுனக்கு?
நீர்க்குடங்கள்,
இட்டுச் சுமப்பதற்கா இடையுனக்கு?

இல்லையடி.
தூளிடித்து;
மாவிடித்து;
சூடைமீன் குழம்புவைத்து;
பாழிருட்டில் தூங்கும் பழக்கமதை விட்டுவிட்டு,
சிங்கவேட்டைக்கு சிலிர்த்தெழும்பி வந்துவிடு.
தும்பி பிடிப்பதற்கே;
துணிவில்லாப் பெண்களென;
எள்ளி நகைப்பவரை ஏளனங்கள் செய்துவிட்டு,
புள்ளியெனச் சுற்றும்;
பூமியினை வெற்றிகொள்ளு.

எழுக என்தங்காய்! எழுக என்தங்காய்!
இருளினுள் ளிருந்து எழுக என்தங்காய்!
மலையென நிமிர்க! மலையென நிமிர்க!
மாதவப் பேறே! மலையென நிமிர்க!

பார்; இந்த வையப் பரப்பெல்லாம்,
எம்மண்ணின்;
கூர் மழுங்கா வீரக் குரல் கேட்கும் நேரமிது.
தடுமாறாச்,
''சூரியத்தலைவன்'' வழிகாட்ட,
விடுதலைப் பண்பாடி,
விரித்த சிறகொடுகால்;
எட்டிமிதித்து, எதிரிமுகாம் மீதெழுந்து,
தொட்டசைத்து,
அங்கே தீமூட்டும் கைகளெவை?
உன்தங்கை கைகள் உலகத்தை அசைக்கிறது.
கண்திறவாய்;
நீயும்;
காலெடுத்து வெளிவருவாய்.

எழுக என் தங்காய்! எழுக என் தங்காய்!
இருளினுள் ளிருந்து எழுக என் தங்காய்!
மலையென நிமிர்க! மலையென நிமிர்க!
மாதவப் பேறே! மலையென நிமிர்க!

உங்கள் அனைத்துத் தேவைகளையும்
நிறைவேற்றும் நிறுவனம்.

பாடசாலை உபகரணங்கள்,
அலுவலக உபகரணங்கள்,
அழகுசாதனப் பொருட்கள்,
அன்றாட வீட்டுப்பாவனைப் பொருட்கள்,
தாயக விடுதலைப் பாடல்கள் [ ஒலிப்பதிவு நாடா ]
தமிழக, ஈழத்து இலக்கியப் படைப்புகள்
அனைத்தையும் பெற்றுக் கொள்ள,

தமிழருவி
71, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உங்களின் வீட்டு வேலைகளில்
சிரமத்தைக் குறைத்து உதவுகின்றது
பகவான் மில்

மாவு அரைத்தல்,
தூள் திரித்தல்,
தானிய வகைகளைக் குத்தியும்,
அரைத்தும் கொடுத்தல்

பகவான் கிறைன்டிங் மில்
ஐந்து சந்தி,
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

# தமிழ் மன்னர்களும் யாழ்ப்பாணக் கோட்டையும்

— ப. புஷ்பரத்தினம் —
முதுநிலை விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை
யாழ் / பல்கலைக்கழகம்

இலங்கையின் முதல் வரலாற்றுப் பாளி இலக்கியங்களில் ஒன்றான மகாவம்சத்தில் நாகதீபம் எனவும், தமிழ் இலக்கியங்களில் ஒன்றான மணிமேகலையில் நாகநாடு எனவும் அழைக்கப்பட்ட இன்றைய யாழ்ப்பாணப் பிராந்தியத்திற்குத் தொன்மையான தொடர்ச்சி குன்றாத பாரம்பரிய வரலாறு உண்டு. வரலாற்றுத் தொடக்க காலத்தில் இப்பிராந்தியத்தில் வாழ்ந்தமக்கள் தமிழ்மொழியைப் பேசினர் என்பதை ஆனைக்கோட்டை, பூநகரி ஆகிய இடங்களில் கிடைத்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமிச் சாசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. இருந்தும் இலங்கையின் ஏனைய பாகங்களில் அரச ஆதரவில் மேற்கொள்ளப்பட்டது போன்ற தொல்லியல் ஆய்வுகள் இப்பிராந்தியத்தில் மேற்கொள்ளப்படவில்லை. தனிப்பட்ட சிலரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் கிடைத்த தொல்லியல் சான்றுகள் கூட சரிவரப் பாதுகாக்கப்படாமை முக்கிய குறைபாடாகும்.

13 ஆம் நூற்றாண்டில் ஒரு மன்னன் ஆளுகைக் குட்பட்ட சுதந்திரத் தமிழரசொன்று யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு உதயமானது. இவ்வரசின் ஆதிக்கம் யாழ்ப்பாணக் குடாநாடு உட்பட கிழக்குமாகாணத்தின் பெரும் பகுதி வரை பரந்திருந்தது. இக்காலத்தில் யாப்பகுவ, குருநாகல், கம்பளை அரசுகள் தென்னிலங்கையில் இருந்த போதும் அவைகளைக் காட்டிலும் யாழ்ப்பாண அரசு படைப்பலத்திலும், பொருள் வளத்திலும் மேலோங்கிக் காணப்பட்டதாக நிகாயசங்கிரகய, இராஜவலிய முதலான சிங்கள நூல்கள் கூறுகின்றன. கி. பி. 1358 இல் கம்பளை இராச்சியத்தில் ஏற்பட்ட கலகத்தில் மூன்றாம் பராக்கிரமபாகு யாழ்ப்பாண மன்னனின் உதவியை நாடினான். இதன் பொருட்டு அம்மன்னன் கம்பளையைச் சேர்ந்த சில பகுதிகளை யாழ்ப்பாண மன்னனுக்குக் கொடுத்தான். கோட்டகம என்றஇடத்தில் கிடைத்த 14 ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ்க்கல்வெட்டு ஒன்று யாழ்ப்பாண மன்னனின் படைகள் மலைநாடு புகுந்து அங்கு ஆட்சியிலிருந்த சிங்கள அரசன் ஒருவனைத் தோற்கடித்தது பற்றிக் கூறுகிறது. இக்கூற்றை உறுதிப்படுத்தும் வகையில் இராஜவலிய என்ற சிங்கள நூல் மலைநாடு, கரையோரம் உட்பட ஒன்பது துறைமுகங்களில் இருந்து யாழ்ப்பாண மன்னர்கள் திறை பெற்றதாக கூறுகிறது. பேராசிரியர் கே. எம். டி. சில்வா என்ற அறிஞர் தென்

னிந்தியப் படையெடுப்புகள் யாழ்ப்பாண அரசிற்கு அச்சுறுத்தலாக அமையாவிட்டால் தென்னிலங்கை முழுவதும் யாழ்ப்பாண அரசின் ஆதிக்கத்திற்குள் வந்திருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு, மத்தியகால இலங்கை வரலாற்றில் சீரும் சிறப்பும் பெற்ற நல்லூர் இராசதானி அமைந்த பிராந்தியத்திற்கு கந்தரோடை, வல்லிபுரம் போன்ற இடங்களைப் போலத் தொன்மையான பாரம்பரிய வரலாறு இருந்ததாகத் தெரியவில்லை. அவ்வாறு தெரிந்து கொள்ளக் கூடியளவிற்கு இப்பகுதியில் அகழ்வாய்வுகள் நடத்தப்பட்டதாகவும் கூறுவதற்கில்லை. இதனால் வரலாற்று ஆசிரியர்கள் பலரும் மத்திய காலத்தில் இப்பிரதேசம் சிறப்புப் பெற்றதற்குத் தமிழ் மன்னர்களின் இராசதானி இந்நகரில் அமைந்ததே காரணம் எனக் கருதுகின்றனர். ஆனால் சமீபத்தில் நல்லூரிற் கிடைத்த 'லஷ்மி' நாணயமும் இதற்குச் சற்றுத் தென்மேற்கே பூம்புகார், மணியந்தோட்டம்ஆகிய இடங்களிற் கண்டு பிடிக்கப்பட்ட ஆதிக்குடியிருப்புகளுக்குரிய சான்றுகளும் கந்தரோடை, வல்லிபுரம் போன்ற நகரங்களுக்கு உள்ளவை போன்ற பாரம்பரியவரலாறு நல்லூருக்கும் இருந்திருக்கலாம் எனக் கருதஇடமளிக்கின்றன. இதேபோல் அன்னியரின் நினைவுச் சின்னமாக உள்ள யாழ்ப்பாணக் கோட்டையும், அதைச் சூழவர உள்ள இடங்களும் வரலாற்றிற் சிறப்புப் பெற்றமைக்கு நல்லூர் இராசதானியின் வீழ்ச்சிக்கு ஏதுவாய் இருந்த போத்துக்கேயரும் பின்வந்த ஒல்லாந்தர், ஆங்கிலேயர் கால ஆட்சியுமே காரணம் எனக் கூறப்படுகிறது. இவற்றுட் கோட்டையின் அமைப்பும் அதன் கலைமரபும் நல்லூரில் உள்ள மந்திரி மனை, கற்றோரண வாசல் முதலியனவற்றைப் போல் அன்னியருக்குரியமதன்பதில் ஐயமில்லை. ஆனால் இவ்விடத்தில் இக்கோட்டை கட்டப்பட்டமைக்கு அன்னியர் தான் முதலில் காரணமாக இருந்தார்களா அல்லது இவர்களுக்கு முன்னரே தமிழ் மன்னர்களுடைய கோட்டை இவ்விடத்தில் இருந்தது தான் காரணமா? என்பது ஆய்வுக்குரிய விடயமாகும்.

இக்கோட்டை அமைந்த சுற்றாடலின் அமைவிடத்தையும், இவ்விடத்துடன் கடல் வழித் தொடர்பு கொள்ளக் கூடிய பண்ணைத்துறை, நாவாந்துறை, அராலித்துறை, ஊர்காவற்துறை, கொழும்புத்துறை போன்ற இடங்களையும் நோக்கும்போது ஆதிகால வெளிநாட்டு வர்த்தகத்தில் இவ்விடமும் தொடர்பு கொண்டிருந்ததெனக் கூறலாம். கோட்டைப் பகுதியிற் கண்டு பிடிக்கப்பட்ட ரோம நாணயமும், இதற்குச் சற்றுத் தென்மேற்கே வேலணை, மண்கும்பான், சாட்டி போன்ற இடங்களிற் கண்டு பிடிக்கப்பட்ட ஆதிக்குடியிருப்புகள் பற்றிய சான்றுகளும் ரோம நாணயங்களும், ரோம மட்பாண்டங்களும், அரேபிய, கிரேக்க, சீன மட்பாண்டங்களும் ஆதியில் இவ்விடங்களுடன் தென்னிந்திய, கிரேக்க, ரோம, அரேபிய, சீனத் தொடர்புகள் இருந்தமைக்குச் சான்றாகும்.

இவ்விடங்கள் பத்தாம் நூற்றாண்டிற் சோழர் ஆட்சியுடன் மேலும் முக்கிய வர்த்தக நடவடிக்கைப் பிரதேசமாக விளங்கியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. தமிழ் நாட்டிற்குக் கிட்டவுள்ள இவ்விடங்களைச் சோழர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் மேற்கில் இருந்து ஏற்பட்ட அராபியரது வர்த்தக எழுச்சியைத் தடுக்கவும், இலங்கையின் பெரு நிலப்பகுதியிலிருந்து ஏற்பட்ட சிங்கள மன்னர்களின் எழுச்சியைக் கட்டுப்படுத்தவும், கிழக்கே தென்கிழக்காசிய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பை ஏற்படுத்தவும் வாய்ப்பாக இருந்திருக்கும். இதை உறுதிப்படுத்தக்கூடிய அதிக சான்றுகள் யாழ்ப்பாணத்தில் இது வரை கண்டு பிடிக்கப்படாவிட்டாலும், இங்கு பரவலாகக் கண்டுபிடிக்கப்பட்ட சோழர் கால நாணயங்களும், சோழரை நினைவுபடுத்தும் செம்பியன்பற்று, வளவர் கோன் பள்ளம், கங்கை கொண்டான்

போன்ற இடப்பெயர்களும் கமால் வீதி, நாரந்தனை போன்ற இடங்களிற் கிடைத்த இவர்கள் காலச் சிற்பங்களும் இதை ஓரளவு உறுதிப்படுத்துகின்றன. இவற்றுட் கோட்டை அமைந்துள்ள இடம் சோழரின் முக்கிய வர்த்தகத் துறைமுகமாக அல்லது அவர்களின் பாதுகாப்பு மையமாக இருந்ததெனக் கருத இடமுண்டு.

போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட யாழ்ப்பாண மன்னர் கால ஆலயங்களையும் அரண்மனைகளையும் கொண்டு இவ்விடத்திற் புதிய கோட்டை கட்டப்பட்டாலும் அவை அனைத்தும் யாழ்ப்பாண மன்னர் காலத்திற்குரியவையெனக் கூறமுடியாது. இக்கோட்டையின் மேற்குப் புறப் பகுதியில் பழமையான கட்டிடங்களுக்குரிய கற்றூண்கள் காணப்படுகின்றன. அவற்றுட் சில, 10ஆம் நூற்றாண்டுக்குரிய கிரந்த எழுத்துக்களையும் கொண்டுள்ளன. இவை பிற்பட்ட பல்லவர் அல்லது முற்பட்ட சோழர் காலத்திற்குரியவையாகும். இக்கற்களை இன்னொரு இடத்திலிருந்து கொண்டு வரப்பட்டவையெனக் கருத இடமிருப்பினும், சிலவேளை இவ்விடத்தில் இருந்த ஒரு கட்டிடத்தின் கற்களாகவும் இவற்றைக் கொள்ளலாம். இக்கோட்டையில் உள்ள இன்னொரு கல்வெட்டு 11 ஆம் நூற்றாண்டில் இராசேந்திர சோழன் நல்லூரில் அமைத்த ஆலயம் ஒன்றுக்குத் தானம் அளித்தது பற்றிக் கூறுகிறது. இது தற்போதைய நல்லூர்க் கந்தசாமி கோயிலுக்கு முற்பட்டதான பழைய ஆலயத்தையோ அல்லது சோழர் காலத்தில் இங்கிருந்த இன்னொரு ஆலயத்தையோ குறித்திருக்கலாம் எனப் பலரும் கருதுகின்றனர். ஆனால் அக்காலத்தில் நல்லூர் என்ற பெயர் தற்போதைய நல்லூருக்கு இருந்ததற்கு ஆதாரமில்லை. இதேவேளை கோட்டை அமைந்துள்ள இடம் யாழ்ப்பாணம் எனக் குறிக்கப்பட்டதற்கும் ஆதாரமில்லை. இதனால் மேற்கூறப்பட்ட சோழர் கல்வெட்டில் வரும் நல்லூர் யாழ்ப்பாணத்தின் முன்னோடிப் பெயரா என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. சோழர் ஆட்சியில் நல்லூர் என்ற பெயர் தமிழ்நாட்டின் பல இடங்களிற்கு இடப்பட்டதற்கு ஆதாரமுண்டு. இதே போல் இலங்கையில் அவர்களின் ஆட்சிக்குட்பட்ட திருகோணமலை, பூநகரி, களுத்துறை, குருநாகல் போன்ற இடங்களிலும் இப்பெயர்கள் உள்ளன. இவ்விடங்கள் பெரும்பாலும் கடற்கரையை அண்டிய துறைமுகங்களிலும் நகரங்களிலும் இருந்ததுடன் இவற்றில் முக்கிய வர்த்தக, பண்பாட்டு நடவடிக்கைகள் இருந்தமைக்கான ஆதாரங்களும் உள்ளன. இவற்றுள் திருகோணமலையிலும், பூநகரியிலும் இவர்கள் கால ஆலயங்கள் கண்டு பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அப்படியாயின், கோட்டையில் இருந்த சோழக் கல்வெட்டை முன்பு இங்கிருந்த ஆலயத்தின் கல்வெட்டாகக் கருத இடமுண்டு. அவ்வாறு கருதுவதற்கு இன்னொரு ஆதாரத்தை இங்கு எடுத்துக் காட்டலாம். இக்கோட்டையின் வடக்காக உள்ள நிலப் பகுதி இன்று 'ஐநூற்றுவன் வளவு' என அழைக்கப்படுகிறது. 'ஐநூற்றுவன்' என்பது சோழர் காலத்திற்குரிய முக்கிய வணிகக் கணங்களில் ஒன்றாகும். இவ் வணிகக் கணங்களே சோழர் காலத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் மட்டுமன்றிப் பல ஆலயங்களைக் கட்டுவதற்கும், நகரங்களை அமைப்பதற்கும் காரணமாக இருந்தன. குறிப்பாக, பொலநறுவையிலும் பதவியாவிலும் உள்ள சில ஆலயங்களின் தோற்றம் வணிகக்கணங்களோடு தொடர்பு படுத்திக் கூறப்பட்டுள்ளது. கோட்டையில் இருந்த சோழர் கல்வெட்டில், ஆலயத்திற்குத் தானம் கொடுத்தவனாக 'சாத்தன்' என்பவன் குறிப்பிடப்பட்டுள்ளான். சாத்தன் என்றால் வியாபாரிகள் கூட்டம் என்று பொருள்படும். பல சோழக்கல்வெட்டுக்களிலே தானம் அளித்தவன் பெயர்களில் சாத்தன் என்ற பெயர் சிறப்பாகக்

குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே சோழர் கால ஆலயம் பற்றிய கல்வெட்டும், அவர் கால வணிகக்கணம் பற்றிய பெயரும் யாழ்ப்பாணக் கோட்டை அமைந்த பிரதேசத்துடன் தொடர்புடையனவாக இருப்பதினால் இக்கல்வெட்டில் வரும் ஆலயம் இங்கிருந்திருக்கலாம் எனவும் கருத இடமுண்டு. இச்சான்றுகளை நோக்கும் போது யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்தி மன்னர் காலத்திற்கு முன்னரே சோழர் காலத்திலேயே தற்போதைய கோட்டை அமைந்துள்ள பிரதேசம் முக்கிய வர்த்தகப் பண்பாட்டு மையமாக விளங்கியதெனக்கூறலாம். இவ்விடமே பிற்காலத்தில் யாழ்ப்பாண மன்னர்களின் முக்கிய கோட்டையாக விளங்கியிருக்க வேண்டும்.

ஆரியச் சக்கரவர்த்தி மன்னர் கால அரண்மனைகளையும், ஆலயங்களையும் விபரித்துக் கூறும் 'யாழ்ப்பாண வைபவ மாலை' அவர்கள் காலக் கோட்டை பற்றியும் கூறுகிறது. செண்பகப் பெருமாள் படையெடுப்புப் பற்றிக் கூறும் 'இராஜவலிய' என்ற சிங்கள நூல் யாழ்ப்பாணத்தில் இவன் அமைத்த காவல் அரண், கோட்டை என்பன பற்றியும் கூறுகிறது. இச்சான்றுகள் போர்த்துகேயருக்கு முன்னரே தமிழ் மன்னர் காலக்கோட்டையொன்று யாழ்ப்பாணத்தில் இருந்ததென்பதை உறுதிப்படுத்துகின்றன. அவ்வாறான கோட்டையொன்று இருந்ததென்பதை ஏற்றுக் கொண்டால், அது கடற்கரையை அண்டிய பகுதியாகவே இருந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. ஆரியச் சக்கரவர்த்தி மன்னன் ஒருவனின் வெற்றி பற்றிக் கூறும் கோட்டகம சாசனத்தில் வரும் 'பொங்கொலி நீர் சிங்கை நகர்' கூற்று இம்மன்னர்கால அரசிருக்கை அல்லது இராசதானியின் கட்டிடம் ஒன்று கடற்கரையை அண்டியிருக்கலாம் என்பதையும் உணர்த்துவதாகக் கருத்தில் எடுத்துக்கொள்ள இடமுண்டு.

தற்போதைய நிலையில் யாழ்ப்பாணக் கோட்டையைத் தவிர, யாழ்ப்பாணத்தின் கடற்கரையை அண்டிய ஏனைய பகுதியில் யாழ்ப்பாண மன்னர் காலத் தொல்பொருட் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மேலும் போர்த்துக்கேயருக்கும் யாழ்ப்பாண மன்னர்களுக்கும் இடையிலான போராட்டங்கள் பல கொழும்புத்துறைக்கும் பண்ணைத்துறைக்கும் இடையிலே நடந்ததாகத் தெரிகிறது. இவற்றை நோக்கும் போது யாழ்ப்பாண மன்னர் காலக் கோட்டை தற்போதைய கோட்டை இருக்கும் பகுதியில் இருந்ததெனக் கூறலாம். அக்காலத்தில் இக்கோட்டை மிகப் பெரிதாக இருந்ததெனக் கூறமுடியாவிட்டாலும் பெருமளவிற்கு மண்ணையும் கல்லையும் கொண்டு கட்டப்பட்டிருந்ததெனக் கூறலாம். போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தில் இருந்த இந்து ஆலயங்களை இடித்து அதன் அருகே புதிய கத்தோலிக்கத் தேவாலயங்களைக் கட்டியபோதிலும், ஆரம்பத்தில் அவை களிமண் கொண்டு கட்டப்பட்டதாகத் தெரிகிறது. இதேபோல் யாழ்ப்பாண மன்னர் காலக் கோட்டையை இடித்து அல்லது அதில் சில மாற்றங்களைச் செய்து போர்த்துக்கேயர் தமது கோட்டையாகப் பயன்படுத்தியிருக்க வேண்டும். இதையே பின்னர் வந்த ஒல்லாந்தர் தற்போதைய நிலையில் கட்டி முடித்தனர். கோட்டையைச் சரிவர ஆராய்ந்தால் இக்கோட்டைக்கும் யாழ்ப்பாண மன்னர்களுக்கும் இடையிலான தொடர்பு மேலும் துலக்கம் பெறும்.

# எழுந்தான்

— பு. சத்தியமூர்த்தி —

பாடசாலை மணி அடித்து ஓய்ந்தது. அவிழ்ந்த நெல்லிக்காய் மூடைபோல மாணவர்கள் பாடசாலையை விட்டுவெளியேறுகின்றனர். சத்தியன் மிதி வண்டியை உருட்டியபடி வெளியே வந்தான்.

கே. கே. எஸ். வீதியூடாகப்போய், கோட்டையைக் கடந்து பண்ணைத்தாம்போதி வீதியின் இருமருங்கும் பார்த்தபடியே மிதிவண்டியை மிதித்தான். மதகுகளின் அருகில் மீன்குஞ்சுகள் ஆயிரக்கணக்கில் நீந்திக்கொண்டிருந்தன. சற்றுத் தூரத்தில் புதைக்கப்பட்டிருந்த ''களங்கண்டி'' வலையில்கருமையும் வெண்மையுமாய் கடற்பறவைகள் மீன்தின்னுவதற்காகக் கூடியிருந்து சிறகடித்தன. கடலைத் தழுவிவரும் காற்று சுகமாக உடலைத் தழுவிச் சென்றது. ஏழுகண்பாலத்தடியில் மீனவர்கள் வீச்சுவலை வீசி மீன்பிடித்துக்கொண்டிருக்க, இளைஞர்கள் சிலர் கடலில் நீந்தியவாறே தண்ணீரால் ஒருவருக்கொருவர் எற்றிக் கூச்சலிட்டுச் சிரித்தனர்.

'றேடியோ சிலோண்' வெளியினுள் புகும்போது தெருவோரம் அமர்ந்திருக்கும் வழிப்பிள்ளையாரைக் கும்பிட்டுவிட்டு சுற்று முற்றும் பார்த்தான். வெளியில் ஏராளமான மாடுகள் மேய்ந்துகொண்டிருந்தன. சிறுவர்களோ ஈச்சம்பழம் பிடுங்கித்தின்றபடி. கண்ணுக்கெட்டிய தூரத்தில் ''பிசறீஸ் பக்ரறி''யின் புகைபோக்கியால் கருமேகமென பெரும் புகைத்திரள் வானத்தில் பரவிக்கொண்டிருந்தது.

ஊரிவயல்வெளியைக் கடந்து செல்லும்போது சூடடிப்பதற்காகக்குவிக்கப்பட்டிருந்த நெற்போர்களைக் கண்ட சத்தியனுக்கு மனம் பூரித்தது.

அடர்ந்து பரந்த பனைவெளிகளிற்கூடாக குடிமனைக்குள் புகுந்து பிள்ளையார் கோயிலடியில் இருக்கும் தனது வீட்டிற்கு வந்தான். முற்றத்தில் அப்பா ஆக்ரோசத்துடன் கத்தியபடி நிற்பதைக் கண்டவனுக்குத் திக்கென்றது. எதிர் வளவினுள் அவனது மாமாவும் வேறு சிலரும் அவ்வாறே. கோபத்தால் கம்மிய குரலில் அப்பா கத்துகிறார். ''என்ரை உயிருள்ள வரை இந்த நிலத்தில ஒரு துண்டையெண்டாலும் நீ பிடிக்க விடமாட்டன்.''

சத்தியனதும் அவனது மாமாவினதும் காணிகள் அருகருகே உள்ளன. வேலியை மாமாதான் அடைப்பது வழக்கம். மாமா வேலியையடைக்கும்போது கதிகால்களைச் சற்று வெளிப்புறமாக நட்டு அடைத்து விடுவார்.

இதை அப்பா நயமாகச் சொல்லித் தடுக்க முற்பட மாமா பயமுறுத்தி அவரை விரட்டி விட்டார். இது அப்பாவுக்குச் சினத்தைக் கிளறவே உருத்திர மூர்த்தியாக இன்று முற்றத்தில் நிற்கிறார்.

## 2

1990 ஜூன் யுத்தம் வெடித்தது. சத்தியன் பாடசாலைக்குச் செல்லவில்லை. தீவுகளில் இருந்து யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் பிரதான பாதை துண்டிக்கப்பட்டது. அராலியால் பயணம். பாடசாலைகள், அலுவலகங்கள் எதுவுமே இயங்கவில்லை.

தினமும் இயந்திரத் தும்பிகளும் இயந்திரப் பறவைகளும் எந்த வேளையிலும் எச்சமிட்டுத் திரிந்தன. ஒருநாள் பட் .. படார் எனப் பெரும் ஓசைகள் தென்திசையில் கேட்கத் தொடங்கின. ''நெருஞ்சி முனையில ஆமி இறங்கியிட்டானாம்.'' ஊரவர்களிடையே பதற்றம். உயிருக்கான நடுக்கம். இப்போது சத்தியனது மாமாவும் அப்பாவும் வேலிக்கு மேலால் பதற்றத்துடன் கதைக்கிறார்கள். இருவரது முகமும் வெளுத்திருக்க.

அதிகாலை 2 மணி. கடலில் இருந்து வானங்கள் வருவது போல மழையெனக் குண்டுகள் ஊருக்குள் விழுந்து வெடிக்கத் தொடங்கின. அனைவரும் உயிரைக் கையில் பிடித்தபடி பங்கருக்குள் பதுங்கிக் கொள்ள அம்மா எல்லாக் கடவுளரையும் அழைத்துக் கும்பிடுகிறாள். வானில் வல்லூறுகளும் தும்பிகளும் தம் கீதத்தைப் பாடத் தொடங்கின. மரங்கள் முறிய, நிலம் அதிர, வீடுகள் சரிய எல்லோரும் கோயிலை நோக்கிப் படையெடுக்கின்றனர். கோயிலுக்கு மேல் தும்பியொன்று தாழப்பறந்தபடியே சடசடக்க கோயிலுக்குள் சனத்திரளின் கூக்குரல்கள்; அலறல்கள்.

சத்தியனது சிந்தனை அவ்வூரில் இருக்கும் போராளிகளையே சுற்றி வந்தது. இவ்வளவு குண்டுகளிற்கும் நடுவில் என்னதான் செய்கிறார்களோ? அவனுடன் ஒன்றாகப் படித்து, உண்டு உறங்கி, விளையாடிய பலரும் அவ்வகையில்.

''டுடொம்'' ...... திடீரென மிகவும் அருகில் பெரும் ஓசை. காதுகள் அடைத்து உடல் பதறப் புகையும், கந்தக நெடியும் எங்கும் பரவுகிறது

''கோயில் வீதியில் விழுந்து வெடித்தது'' அனைவரும் சுவர்களோடு, ஒருவருக்குள் ஒருவர் பதுங்கியபடி.

பச்சை உடைகளும், பயங்கரமுகங்களும் கோயிலுக்குள் பிரசன்னமாக எங்கும் விபரீதமான அமைதி. இராணுவச் சப்பாத்துகளின் ஒலியும் சிங்கள உறுமல்களும், துப்பாக்கிகளை அசைக்கும் ஒலியையும் தவிரவேறு சத்தமே கிடையாது. குழந்தைகள் கூட மூச்சின்றி இருக்க அனைவரும் உயிரைக் கையில் பிடித்தபடி. கோயிலுக்கு முன் அநுமன் வாலென நைலோன் கயிற்றால் கைகள் பிணைக்கப்பட்ட இளைஞர்களின் வரிசை. பரிதாபமான முகங்கள், சட்டைகள் கிழிந்து தொங்க இரத்தக் கோடுகளுடன். வெளியே ஒருவன் பெரிய நைலோன் கயிற்றுச் சுருளுடன் நின்றான். பாசக் கயிற்றுடன் நிற்கும் யமகிங்கரனோ.?

பிள்ளைகள் அம்மாவை நெருங்கி அவளுடன் ஒண்டியிருக்க தாய் அவர்களை நடுங்கும் கரங்களால் அணைத்துக் கொண்டிருந்தாள். அனைவரும் இதே நிலையில். பச்சைத் தலைகள், தாடியுடன் பின் தொடரும் ஏவல் பேய்களுடன் வருகின்றன. சுழன்று உருளும் ஆந்தை விழிகள். இளைஞர்களின் முன்னே நின்று முகத்திற்கெதிரே ''ம்'' என்ற உறுமலுடன் கையைச் சுண்டுகிறான். அவர்கள் நடுங்கியபடி எழுந்து நிற்க தாய்மார் உறவினர்கள் துப்பாக்கிமுனையில் அமர்த்தப்

படுகின்றனர். அதையும் மீறுபவர்கள் ஆக்ரோசமாகத் தாக்கப்படுகின்றனர். இளைஞர்கள் அவர்களால் அழைத்துச் செல்லப்பட எங்கும் ஓலம்; மெய்த்துடிப்பு,; இரத்தங்களை இழந்த பரிதவிப்பு.

3

''அங்கை பாரணை அம்மா''. சத்தியன் தாயைச் சுரண்ட அங்கு சற்று முன் அழைத்துச் செல்லப்பட்ட சிலர் ரத்த மிளாறாக ரத்தம் சொட்டச் சொட்ட நிறுத்தப்பட்டிருக்க அம்மா தலையிலே கைவைத்துக் கதறுகிறாள். குழந்தைகள் பசியால் அவறின. சில மணித்துளிகளின் பின் களைத்துச் சோர்ந்து தாய்மாரின் மடியில் சுருண்டு கிடக்கின்றன.

இரண்டாம் நாள் இரவு. ஒருவன் கொச்சைத் தமிழில் ''நாளைக்கு காலல நீங்க எல்லாரும் இந்த கமத்தை விட்டு போறது. ஒரு மணி தாங் நாங் தாறது'' எனக் கூறிச் சென்றான்.

விடிந்தது. சத்தியன் தனது வீட்டுக்குப் போனான் அங்கே ஒரு மண் மேடு, சிதலமடைந்து கிடக்கிறது. அவனுக்கு இந்த வரிகள் மனதில் ஓடின.

'மண்மேடாய்க் கிடக்கின்ற வீடுகளைப்பாரும் - இது முன்நாளில் தமிழர்களின் குடியிருப்பு ஆகும்.'

நேற்று முன்தினம் வரை அது சத்தியனின் குடியிருப்பு. இன்று மண் மேடு. உடுத்த துணியுடன் கால்நடையாகவே பரவைக் கடலைக் கடந்து போனால் அங்கும் அதே கொடூர முகங்கள். கூடவே சில கோடரிக் காம்புகள்' ஒரு ஈச்சம்பற்றையின் ஓரத்தில் நீட்டி நிமிர்ந்து வானத்தைப் பார்த்தபடி ஒருவர். அவர்மேல் காகம் அமர்ந்து ஓ..... சொந்த ஊரை விட்டு வந்த தமக்கு தஞ்சமென அடுத்த ஊர். அம்மன் கோயிலில் அடைந்து அமர்ந்தனர். மூன்று நாள் பட்டினி, வயிற்றைறக்காந்துகிறது.

4

இரவு, மூன்று நாட்பட்டினிக்கு கஞ்சி குடித்த அசதியில் அம்மா அடித்துப் போட்டது போல் தூங்கி விட்டாள். அப்பாவும் அதே போல். சத்தியினின் உடல் தளர்ந்திருந்தாலும் மனம் உறங்க மறுத்தது. சிந்தனை வேகமாகச் சுழன்றது. அவனோடு ஒன்றாகப்படித்து விளையாடி வளர்ந்தவர்கள் அழைத்துச் செல்லப் பட்ட விதமும், சற்று நேரத்தில் ரத்தம் சொட்டச் சொட்ட கொண்டு வந்து நிறுத்தப்பட்ட முகங்களும், பசியால் சுருண்டு விழுந்த குழந்தைகளும், ''என்ரை உயிருள்ள வரை இந்த நிலத்தில ஒரு துண்டையெண்டாலும் நீ பிடிக்க விடமாட்டன்'' என்று மாமாவுக்கு அப்பா சொன்ன சொற்களும். ஆனால் இன்று ஒரு மணி நேரத்தில் தங்கள் மண் பறிபோன விதமும் ஒன்றன் பின் ஒன்றாக; அவனது வீடு, அவன் பிறந்து வளர்ந்து விளையாடிய வீடு இன்று மண்மேடாக... அவனால் தாங்க முடியவில்லை அசதியுடன் எழுந்தான். அவ்வளவு குண்டுகளுக்கும் இடையில் திடமான மன உறுதியுடன் நிற்கும் போராளிகளின் நினைவு வந்தது. நடக்கத் தொடங்கினான். □□

''ஒரு விடுதலை இயக்கத்துடன் அணிசேர்ந்து கொள்வதன் மூலமே பெண்ணினம் தனது விடுதலை நோக்கிய இலட்சியப் பாதையில் வெற்றி பெற முடியும். பெண் விடுதலைக்கு களம் அமைத்துக் கொடுத்திருக்கும் எமது புரட்சி இயக்கத்துடன் பெண்ணினம் அணிசேரும் பொழுதுதான் எமது போராட்டமும் முழுமை பெறும்.''

— 1992, அனைத்துலக மகளிர் நாளையொட்டி தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் விடுத்த அறிக்கையிலிருந்து.

மக்களின் மனதில் நீண்ட காலங்களாக வீ. ஆர். ரீ. என்ற பெயர் நிலைத்து வருகிறது. விவசாயப் பொருட்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், மற்றும் இரும்புப் பொருட்களுக்கும் 'வீ. ஆர். தம்பிப்பிள்ளை அன்சன்ஸ்' என்ற நினைவே எல்லோருக்கும் உடன் வருகிறது.

இது வீ. ஆர். தம்பிப்பிள்ளை அன்சன்ஸ் வழங்கிவரும் நேர்மையான சேவையின் விளைச்சல்.

V.R.T

விவசாய இரசாயனப் பொருட்கள் (உரவகை, மருந்து வகை) பயிர்களைப் பாதிக்கும் எந்த நோய்களையும் தடுப்பதற்கு புதிய மருந்து வகைகள், கூடுதலான விளைச்சலைப் பெறுவதற்கு உரவகைகள் என சக்லதையும் வீ. ஆர். ரி. யில் பெற்றுக்கொள்ளலாம்.

இரும்பு உதிரிப் பாகங்கள்,
மோட்டார் உதிரிப் பாகங்கள்,
அசிற் விற்பனை

தொடர்புகொள்ளுங்கள்

**வீ. ஆர். தம்பிப்பிள்ளை & சன்ஸ்**

யாழ் வீதி, கிளிநொச்சி.

## சிம்மாசனங்கள் நிரந்தரமல்ல

நீரேரி எங்களது
நீயார் தடைசெய்ய?
பிறநாட்டுக்குச் சொல்வதற்கு
இதுதான் சட்டமென்கிறாய்;
கண்மூடித் தூங்க,
கருத்தில்லாப் பொருளா நாம்?
உங்களைப்போலவா நாங்கள்?
இல்லைப் பிரதமரே!

83ல்
மின்னல் கீற்றாய்
எங்கள் போராட்டம் முளைத்தது;
அன்றும் வெறியாடினீர்.
93ல்
இன்றும் வெறியாட்டம்.
அன்று நேரில் பார்க்கவே பயந்தோம்
இன்று முகம் கொடுத்து நிற்கின்றோம்.
பழிக்குப்பழி! ரத்தத்துக்கு ரத்தம்!
வேண்டாம்,
ஐந்தறிவு கொண்டவரல்ல நாங்கள்.
குருநகர்க் கடலில்
தமிழனின் குருதியில் குளித்தீர்;
கிளாலிக் கடலில்
மீண்டும் குருதிக் குளியலா?

தமிழர் என்ன
விறகா மரமா
வெட்டிக் கொத்த
பிரதமரே!
ஒன்று செய்யுங்கள்.
மனுநீதிகண்ட மன்னனைப்பற்றி
கொஞ்சமாவது தெரிந்து கொள்ளுங்கள்.
முத்துப்பந்தல் தோரணவாசல்
சிம்மாசனங்கள் நிரந்தரமல்ல........

— கலையன் —

# நாடகம் ஒரு கலையாக

— க. சிதம்பரநாதன் —

கலை என்பது பற்றிப் பொதுவாகக் கருதும்போது, வாழ்க்கை பற்றிய கலைஞனின் வியாக்கியானம் மற்றவர்களால் புரிந்துகொள்ளப்படும் வகையில் கலைஞனால் வெளிப்படுத்தப்படுதல் எனக் கூறலாம். அதாவது கலைஞன் தனது சூழலுடன் கொள்ளும் தொடர்பின் காரணமாக ஏற்படும் மனவெழுச்சிகளையும், சிந்தனைகளையும் மற்றவர்களுக்கு வெளிப்படுத்த விளையும் போது கலை உருவாகிறது. எனலாம். இந்தக் கலைப் படைப்பாக்கத்தின் போது அவன் தனது அனுபவங்களின் மூலம் பெற்ற வாழ்க்கை பற்றிய படிமங்களை ஞாபகப்படுத்தி பார்வையாளருக்கு வழங்குகின்றான். அதாவது குறியிட்டுப் படிமங்களை பார்வையாளருக்கு எறியப்படுத்துவதே ஒரு கலைஞனின் நோக்கமாக இருக்கும். இவ்வாறு உருவாக்கப்படும் கலைப்படைப்பு கலைஞனின் கற்பனையின் விளைபொருளாக இருக்கும்.

ஓவியம், சிற்பம், நாடகம்... போன்ற கலை வடிவங்கள் இத்தகைய விளை பொருள்களே. நாடகத்தைப் பொறுத்த வரையில் மேற்கூறியவாறு படிமங்களை உருவாக்குகையில் நெறியாளன், நாடகபாட எழுத்தாளன், நடிகன், விதானிப்பாளன், இசையமைப்பாளன், காண்பியக்கலைஞன் (*Visual artist*) போன்றோர் சேர்ந்து உழைக்கின்றனர். நாடகம் என்பது ஓர் தொடர் படிமக் கலையாகும். ஒவ்வொரு கணமும் செவிப்புல, கட்புலப் படிமங்களை இக்கலை பார்வையாளருக்கு வழங்கும்.

கலையின் நோக்கத்தை ஒரு பரந்தளவில் கருதும்போது, பார்வையாளனை மகிழ்விப்பது என்று விளங்கினாலும் கூட பார்வையாளனது மனவெழுச்சிகளை கிளறி அதன் மூலம் அவனை ஒரு சிந்தனைக்கு இட்டுச் செல்வதும் தவிர்க்க முடியாதது ஆகும். நல்ல கலைப்படைப்புகள் என்று அடையாளம் காணப்படக் கூடியவை கட்டாயம் இதைச் செய்யும். இந்த மனவெழுச்சிக் கிளறல் வெறுமனே கலைப்படைப்பை பார்வையிடும் போதாகிற ஒரு தற்காலிக நிகழ்வாக இல்லாமல் அவனில் தொடர்ந்து பாதிப்பை செலுத்துகிற தன்மையுடையதாக இருக்க வேண்டும். ஒரு நல்ல கலைப்படைப்பின் சில படிமங்களாவது பார்வையாளனில் தொடர்ந்து நிலைத்திருக்கும். அதன் மூலம் அவனில் சிந்தனையை ஏற்படுத்தும். கலைப்படைப்பு நுகர்வின் பின்பும் அது அவனில் நிலைத்திருந்து, அவனில் சிந்தனையைத் தூண்ட வேண்டியது முக்கியமானதாகும்.

ஆனால் இங்கு ஒரு பிரச்சினை உண்டு. கலைஞன் உலகை அனுபவிக்கும் விதத்தில் தனது நேர்மையான மனவெழுச்சிகளையும், எண்ணங்களையும் வலிமையான படிமங்களாக பார்வையாளனுக்கு வழங்கும் போது அப் படிமங்களின் செல்வாக்கு வட்டத்துள் பார்வையாளனும் இழுத்துவிடப்படும் சந்தர்ப்பம் உண்டெனினும், இது நிகழ முடியாத சந்தர்ப்பமும் உண்டென்பதை நாம் மறந்து விடக்கூடாது. கலைஞனின் மனவெழுச்சிகளையும், எண்ணங்களையும் பார்வையாளன் அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாத போது இந்தப் பிரச்சினை உருவாகிறது. கலைப்படைப்பை நுகர்கின்ற பார்வையாளன், அதை தனது பண்பாட்டுச் சுற்றுவட்டத்துள் வைத்தே அனுபவிக்கிறான். பார்வையாளனது சிந்தனை அவனது பண்பாட்டுச் சுற்றுவட்டத்தால் நிபந்தனைப்பட்டிருக்கும். எனவே கலைஞனின் எண்ணங்களும், பார்வையாளனின் எண்ணங்களும் முரண்படுகிற போது கலை அனுபவம் குழப்பப்பட்டுப் போகலாம். இதனால் கலைப்படைப்பு பார்வையாளனில் ஏற்படுத்த வேண்டிய பதிவுகளை ஏற்படுத்தாமல் போய் விடக்கூடிய சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. அநேகமான அரசியல் அரங்குகளில் நடைபெறுவது இது தான்.

இத்தகைய ஒரு நெருக்கடியில் கலைஞனின் எண்ணங்களிற்கும், பார்வையாளனின் எண்ணங்களிற்கு மிடையில் ஓர் கருத்தாடல் ஏற்படவேண்டியது அவசியமாகிறது. நாடக அரங்கு ஓர் விவாதக்களமாக மாற வேண்டியது அவசியமாகிறது நாடகக் கலைஞருக்கும், பார்வையாளருக்கு மிடையே ஓர் சங்கமம் ( *Communion* ) ஏற்பட வேண்டியது அவசியமாகிறது. இவ்வாறு ஓர் சங்கம நிலை ஏற்படின் கலை அனுபவம் ஓர் பூரணத்துவம் வாய்ந்ததாக இருக்கும்.

□□

# அனைத்துலக பெண்கள் நாள்

# மார்ச் 8. 1993

"அடுப்பங்கரையில் உறங்கிக்கிடந்து
அழிந்தது போதும் எழுவாய்.
விடுதலைதேடும் புலிகளின் பாசறை
வீடுகள் தேடி வருவாய்."

# வருகிறோம்

— கிளிநொச்சி மூர்த்தி —

புழுதியைக் கிளப்பிக்கொண்டு ஜீப் ஒன்று வேகமாகச் சென்றது. ''இது நம்மடை பொடியளின்ரை ஜீப்'' சங்கக் கடைச் சந்தியில் நின்ற செல்லத்துரையர் முகத்தில் பெருமிதம் மலரக் கூறினார்.

''முந்தியெல்லாம் ஜீப்பைக் கண்டால் ஒரு சனம் சந்தியிலை நிக்குமே? இப்ப சந்தோசத்திலை கையைக் காட்டிறம். செல்லத்துரை அண்ணர் கதைசொல்ல ஆரம்பித்தால் ஒரு நாடகத்தையோ, திரைப்படத்தையோ பார்ப்பது போன்ற சுவாரஸ்யம் இழையோடிக் கொண்டிருக்கும். பல சமயங்களில், எப்பொழுதும் கையிலிருக்கும் தினசரிப் பத்திரிகையின் செய்திகளின் விளக்கவுரையாகவும் அமைந்து விடுவதுண்டு.

வயது அறுபதைக் கண்ட செல்லத்துரையர் தீவுப்பகுதியிலிருந்து விவசாயம் செய்வதற்காக முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்பே கிளிநொச்சியில் வந்து குடியேறியவர். தீவுப்பகுதியின் வரண்ட மண்ணிலேயே வெங்காயமும், புகையிலையும் விளைய வைத்த செல்லத்துரையருக்கு இரணைமடு நீர் பொங்கிப் பாயும் கிளிநொச்சி அள்ளி அள்ளிக் கொடுத்ததில் ஆச்சரியப்பட எதுவுமேயில்லை.

தொழில் தேடி இந்த மண்ணுக்கு வந்த செல்லத்துரையர், இதையே சொந்தமண்ணாக்கிக் குடும்பத்துடன் இங்கேயே குடியேறி விட்டார். அதனால்த்தான் போலும் அவர் அடிக்கடி ''டேய், நான் கிளிநொச்சியை உருவாக்கினதிலை ஒருத்தனடா!'' என்று கைமுஷ்டியை உயர்த்திப் பெருமையுடன் சொல்லிக் கொள்வார்.

தூரத்தே தள்ளாடியபடியே வந்து கொண்டிருந்த பாலசுந்தரம் வாத்தியாரைக் கண்ட முருகேசு பதட்டத்துடன் செல்லத்துரையரிடம்,'' அண்ணை, வாத்தி வருகிது.''

நிமிர்ந்து நோக்கிய செல்லத்துரையர், ''ம்... வெறிபோலை கிடக்குது...'' என்று இழுத்தார்.

முருகேசுவின் முகத்தில் வெறுப்புப் பொங்கி வழிந்தது.

"இவங்களுக்கெல்லாம் ஒரு வாத்தி வேலையும், அதிபர் பட்டமும், தாங்களும் அழிஞ்சு பள்ளிக்கூடத்தையும் குட்டிச்சுவராக்கிறாங்கள்."

செல்லத்துரையர் ஒரு நீண்ட பெருமூச்சொன்றை விட்டார், "ம்... மனுஷியும், பிள்ளையளும் ஷெல்லடியிலை செத்ததிலையிருந்து மனுஷன் இந்தக் கோலம் தானே!"

"அதுக்கு உப்பிடித் தன்ரை மரியாதையை இழக்கிறதே...?"

"உண்மை தான்... அநீதியாலை பாதிக்கப்படுகிறவை கவலைப்படுற தோடை நிண்டு விடினம். அநீதியை ஒழிக்கிற வழியைப் பாப்பமெண்டு யோசிக்கினையில்லை"

இந்த வார்த்தைகள் முருகேசுவின் மனதில் என்னவோ ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். முகம் ஒரு முறை திடீரெண்டு கறுத்துத் தெளிந்தது "செல்லத்துரை, நான் துணைப்படைப் பயிற்சிக்கு வர மறுத்ததை வைச்சு நீ குத்திக் காட்டுறாய் என்ன?"

செல்லத்துரையர் மெல்லச் சிரித்தார், "பயந்தாலும், பயப்பிடாட்டியும் எதிரி தாற தொல்லை, தொல்லை தானே. ஆனால் நாங்களும் எங்கடை பிள்ளையளோடை கூட நிண்டால் பெலம் கூடின மாதிரியல்லே!"

"எனக்கேதேனும் நடந்தால் என்ரை பிள்ளை குட்டியை நீ பார்ப்பியே?", முருகேசு சற்று ஆத்திரமாய்க் கேட்டார்.

செல்லத்துரையர் மெல்லிய புன்னகையுடன் கூறினார், "இப்ப பிள்ளை குட்டியளெல்லே எங்களைப் பார்க்குதுகள். அதுகள் இல்லாட்டில் முந்தின காலம் மாதிரி ஜீப்பைக் கண்டிட்டு ஓட வேண்டியது தான்."

முருகேசுவுக்கோ செல்லத்துரையரின் ஒவ்வொரு வார்த்தைகளும் தன்னைக் கிண்டல் செய்வது போலவே தோன்றியது. மெல்ல அவர் முகத்தில் கோபத்தின் சாயை படர்ந்தது.

"இன்னும் ஒரு மூண்டு மாதம் போகட்டும் உன்னோடை வாறனோ இல்லையோ பார்!"

"ஏன் இப்ப காலம் கூடாதே?"

"என்ரை மூத்தவளுக்கு இப்ப ஏழுமாதம். பேரப்பிள்ளையை ஒருக்கால் தூக்கிக் கொஞ்சிப் போட்டு... பிறகு பாரன்."

இவை வெறும் ரோஷத்தில் பிறந்த வார்த்தைகள் என்பது செல்லத்துரையருக்கு விளங்கும். ஆனால் அவர் மேற்கொண்டு எதுவுமே பேசவில்லை.

மாலை மங்கி இருள் பரவத் தொடங்கியது. வானத்தில் பறந்த பறவைகளின் ஓசைகள் அடங்கி விட்டன. ஏதோ ஒரு பயங்கரத்தை எதிர்பார்ப்பது போல் வௌவால்கள் பறந்து மரக்கிளைகளில் மோதிச் சடசடத்துக் கொண்டிருந்தன. சூழல் இருளுள் கறுத்துக் கிடந்தது.

செல்லத்துரையரும் அவரது குழுவினரும், கண்களால் கரிய இருளைத்

துழாவியவாறு காவற்கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இப்பொழுதெல்லாம் செல்லத்துரையர் சுருட்டுப் பிடிப்பதில்லை. கள்ளுக் கொட்டிலில் மணிக்கணக்காகக் குந்தியிருந்து அரசியல் வியாக்கியானம் செய்வதைக் கூட விட்டுவிட்டார். முருகேசு கூட அவருடன் சகல விஷயங்களிலும் ஒத்துப்போகக் கூடிய நண்பர் தான். ஆனால் இந்தத் துணைப்படையில் இணைவதைப் பற்றிக் கதைத்தால் மெல்ல அவ்விடத்தை விட்டு கழன்று விடுவார்.

''முருகேசு...நல்லவன் ஆனால் பயந்தாங்கொள்ளி.''; இப்படி அவர் மனம் அசை போட்டது.

ூ ூ ூ ூ

அன்று மிளகாய்க் கன்றுக்குப் பசளை போட்ட அலுப்பில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த முருகேசு அண்மையில் எங்கோ விழுந்து வெடித்த ஷெல் சத்தத்தினால் திடுக்கிட்டு விழித்தார்

அவருக்கு முன்னாலேயே விழித்துப் பரபரத்துக் கொண்டு நின்ற மனைவி மனோன்மணி ''ஆமி வெளிக்கிட்டிட்டாங்கள் போலை கிடக்குது.'' என்றாள் பயத்துடன்.

முன்தெருவால் சனங்கள் கையில் கிடைத்ததை மட்டும் கொண்டு அவசர அவசரமாக ஓடிக்கொண்டிருந்தனர். சமீபத்துக் கொண்டிருந்த ஷெல் சத்தங்களும், வெடியோசைகளும் அவர்கள் ஓட்டத்தைத் துரிதப்படுத்தின.

''வா! வா! நாங்களும் போவம்'' முருகேசு பதட்டத்துடன் மனைவியைத் துரிதப்படுத்தினார்.

அவர்கள் உயிரைக்கையில் பிடித்துக் கொண்டு ஓடிய ஓட்டம் அடுத்த ஊர்ப்பாடசாலை வளவுக்குள் கால் வைத்த பிறகு தான் நின்றது. பாடசாலை ஏற்கனவே இடம் பெயர்ந்தவர்களால் நிரம்பி வழிந்தது.

''மனோன்மணி! பிள்ளையும் மருமோனும் என்னபாடோ தெரியயில்லை'' அப்பொழுது தான் அவர் மனதில் மகளின் வயிற்றில் வளரும் தனது பேரப்பிள்ளையின் நினைவு தோன்றியது.

''ஒருக்கால் சனத்துக்கை பாருங்கோ எங்களுக்கு முன்னாலை வந்தினமோ தெரியேல்லை'' மனோன்மணியின் வார்த்தைகளில் ஒரு நம்பிக்கை இளையோடினாலும், நெஞ்சுக்குள் ஒரு நடுக்கம் இல்லாமல் இல்லை.

முதிரைமரக் கொப்புகளைக் கீழே தள்ளி விட்டு எட்டிப்பார்த்த பின்னிலவின் மங்கிய வெளிச்சத்தில் மகளையும், மருமகளையும் தேடிய முருகேசருக்குக் கவலைப்பட்டுக் குழம்பு வைத் தவிர வேறு வழியே இருக்கவில்லை. அவர்களைக் கண்டதாகச் சொல்லும் ஒரு மனிதஜீவன் கூடி அந்தப் பெரிய கூட்டத்தில் இருக்கவில்லை.

கிழக்கு மெல்ல மெல்ல வெளிக்கின்ற அந்த நேரத்தில் தான் வெடிச் சத்தங்கள் ஒருவாறு ஓய்ந்தன.

நித்திரையின்மையால் சோர்ந்திருந்த கண்களை விட முருகேசுவின் மனம் கூடுதலாகத் தொய்ந்து போயி

ருந்தது. ''மனோன்மணி, நான் ஒருக்கால் போய்ப்பார்த்துக் கொண்டு வரட்டே?''

''இப்பதானே வெடிச்சத்தம் நிண்டிருக்கிது. கொஞ்சம் பொறுத்துப் போங்கோ!''

நடப்பது நடக்கட்டும் என்ற நினைவு எழும்பவே முருகேசு மனைவியிடம் எதுவும் சொல்லாமலே பாடசாலையை விட்டு வெளியே வந்தார் மனோன்மணியின் பிள்ளைப்பாசம், தடுக்க வேண்டும் என்று எழுந்த உணர்வை அப்படியே அமுக்கிவிட அவளும் அவர் போகும் பாதையைப் பார்த்தவாறே நின்று கொண்டிருந்தாள்.

ஓ ஓ ஓ ஓ

குழம்பிய மனதுடன் தெருவால் நடந்து கொண்டிருந்த முருகேசுவின் கண்களில், தோளில் துவக்குகளுடன் சிவர் நடந்து வருவதைக் கண்டதும் நெஞ்சு ஒரு கணம் துணுக்குற்றது. சற்றுக் கூர்ந்து அவதானித்த பின்பு தான் அவர்கள் கட்டியிருப்பது சாரம் என்பதையும், முன்னால் வருவது செல்லத்துரையர் என்பதையும் அவரால் புரிந்து கொள்ளமுடிந்தது.

முருகேசு மெல்ல அவர்களை நெருங்கினார்.

''முருகேசு! என்ன விடியக்காலமை...?''

''அண்ணை! பிள்ளையையும் மருமோனையும் காணயில்லை''

''அவை பின்னாலை வருகினம்'', செல்லத்துரையர் வார்த்தைகள் முருகேசுவின் வயிற்றில் பாலை வார்த்தன; ''ஆமி வெளிக்கிடயுக்கை அவையாலை இஞ்சாலை வர ஏலாமல் மாட்டுப்பட்டுப் போச்சினை. எங்கடை தம்பியவை களையாமல் நீண்டு அடிபட்டு ஆமியைத் திருப்பிக் கலைச்சுப் போட்டினை! நாங்களும் தம்பியவையோடை பக்கத்திலை நிண்டு எல்லா உதவியும் செய்தனாங்கள்.''

செல்லத்துரையர் முகத்தில் பெருமிதம் தோன்றியது. தன்னுடைய மகளையும், மருமகளையும், பிறக்கப் போகும் பேரப்பிள்ளையும் காப்பாற்றிய அவர்களைக் கையெடுத்துக்கும்பிட வேணும் போன்ற ஒரு உணர்வு முருகேசர் மனதில் தோன்றியது.

செல்லத்துரையர் தொடர்ந்தார். ''பேரப்பிள்ளையைக் கண்டபிறகு தான் எங்களோடை வரப்போறனெண்டாய். தம்பியவையும், நாங்களும் இரவு ஆயுதமேந்தி அடிபட்டுத் திருப்பிக்கலையாட்டில் நீ எந்தப் பேரப்பிள்ளையைக் கொஞ்சியிருப்பாய்?''

முருகேசுவின் கண்களில் ஒரு புதிய ஒளி பிறந்தது. செல்லத்துரையரின், தோளில் கிடக்கும் துப்பாக்கியையும், தோளில் குறுக்காகத் தொங்கிய தோட்டாப் பட்டியையும் ஒரு வித நேசபாவத்துடன் பார்த்தார். அந்தத் துப்பாக்கி தன்னுடைய தோளில் ஏறுவதான ஒரு பிரமை தோன்றவே ஒடுங்கியிருந்த அவரது நெஞ்சு தானாகவே நிமிர்ந்தது.

□□

# புதுநிலம்

## அறைகூவல்

பொழுது புலரவில்லை
பேய் இருளகலவில்லை
ஆயினும் நடுச்சாமத்தில்
காரிருளே அகலெனக்
கூவியது ஓர் சேவல்.

பகைவர் விட்ட
'பரா லைட்டைக்'
கண்டு விட்ட அக்
கொண்டைச் சேவலும்
'மண் மீட்க வா!
மறத்தமிழா' என
மார் நிமித்தியோர்
போர்க் குரலினில்
வீரமாய்க்
கூவிடுதோ?

— முத்து விஜயராகவன் —

●

## தேடல்கள் தொடரும் ..

பெரு வெடியோடு
வேட்டொலி கலந்த
கனத்த இரவு,
மெதுவாய் கரைந்தது.
எங்கள் தேசத்தின்
எல்லையுள் 'நான்' என்று
நிமிர்ந்து நின்ற
எதிரியின் பாசறை
எரிந்து சரிந்து
புகைந்து கொண்டிருந்தது.
சாம்பல் மேட்டினில்
வரி உடை வீரன்
விழிகளில் தேடலைத்
தேக்கி நடந்தான்.
உயிரான நண்பனின்
உடற் கூறையேனும்
பார்த்திட வேண்டும்
என்றவன் துடித்தான்.
எங்கள் மண்ணின்
விடியலுக்காக
நித்தமும் இப்படி
தேடல்கள் தொடரும்.

— வேண்நிலா —

●

## எழுச்சி

சந்தன மார்பில் குங்குமம்
படுகையில்
அந்நியன் 'ஷெல்' பட்டு
ஆண்டவனான் அவன்.

பட்டமரா வாழ்க்கை போல்
அவள்.
ஓடும் காவிரி
அவள் கண்ணில்.

காற்றுப் போல வாழ்ந்தவள்
கைதியானாள்.
பொட்டுடன் பொலிந்தமுகம்
வெறுந்தரையாகிற்று.

தான் பேசும் மொழியின்று
தன்போலாகிவிட்ட தென்று
எழுந்தாள் நடக்க
ஒரு வழியில்.

●

— இராஜபிரதீபன் —

# காலக்குரல் கேட்கிறது

— கருணாகரன் —

இன ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டம் மிகவும் தீவிர முனைப்படைந்துள்ள இந்த வேளையில் கலை, இலக்கியங்கள் பற்றிய சிந்தனைகளை ஒரு கவனத்துக்குட்படுத்திப் பார்ப்போம். முன் எப்போதையும் விட இன்றைய நாட்கள் நம் வாழ்வின் குரல்வளையை நசுக்குவதாகவுள்ளன. போராட்டம் வளர்ச்சியடைந்து மக்கள் மயமாகி வருகையில், அதிகாரவர்க்கத்தின் தீவிர ஒடுக்குதல் நம்மீது கொடூரமாகப் பதிகின்றது; இந்த நாட்களில் அலைவுகள், மனித உணர்வுகளை மீறும் வேதனைகள், இழப்புகள் எல்லாம் நம்மீது கவிந்துள்ளன. ஒரு தாங்க முடியாத சுமையாக எம்மை அழுத்துகின்றன. இவை எங்களது காலத்தின் துயரங்கள்.

கடந்த முன்னூறு வருடங்களுக்கு மேற்பட்ட அடிமை வாழ்வின் போது, எங்களிடையே நிகழ்ந்த அடக்கு முறைகள், குறைபாடுகள் என்பவற்றுக்கு எதிராக கலை, இலக்கியங்கள் அவ்வக்காலங்களில் தோற்றங் கொண்டன. அவை சாதி, சுரண்டல், பெண் ஒடுக்குமுறை, அரச அதிகாரம் போன்ற பல சாரங்களை உடைக்கும் அல்லது வெளிப்படுத்தும் பாங்குடனும், மன அவசங்களின் அடிப்படையிலும் வெளிப்பட்டன. இந்த முறையானது 1970 கள் வரை துல்லியமாகக் காணப்பட்டது. 70 களின் பின்னர் அதிகமாக இன ஒடுக்குமுறைக்கெதிரான விழிப்பு, இனப் பிரச்சனை பற்றிய கலை வெளிப்படுத்தலாக மாற்றங் கொண்டது. 80 களில் இன ஒடுக்குமுறை தீவிரமாகத் தமிழினத்தின் மீது தாக்கமேற்படுத்திய பொழுது, அதற்கெதிரான வெளிப்பாட்டுத்தளம் பலமாகவும், விரிவாகவும் ஓங்கத்தொடங்கியது. 70 களின் பின்பாதியிலும், 80 களின் தொடக்கததிலும் வெளிவந்த கலைப்படைப்புகளில் இவற்றை அவதானிக்கலாம். கவிதைகளில், புதிய பரிமாணங்களுடன் ஒடுக்குமுறையின் போது அனுபவிக்க வேண்டியேற்பட்ட துன்பியல்களும், இந்த உணர்வுகளினூடு போராட்டத்தின் பக்கம் எழவேண்டிய புதிய சிந்தனைகளும் வெளிப்பட்டன. சிறு கதைகளும் இவ்விதமான நியதியுடனேயே வெளிவந்தன. நாவல்களும் இந்த அடிப்படையிலேயே ஓரளவுக்கு உட் பொருள் கொண்டனவாக இருந்தன. மற்றும், அரங்க முயற்சிகளிலும் இந்தத் தாக்கங்கள் காணப்பட்டன.

புதிய படைப்பாளிகள் கவனம் கொள்ளும்படியான சிந்தனைத் தெறிப்புகளுடன் எழுதத் தொடங்கினர். அவர்களின் வெளிப்பாட்டுத் திறனில்,

சமகாலத்தை ஆழமான பார்வையுடன் காணமுடிந்தது. தனியாகவும், கூட்டாகவும், அவ்வேளையில் பல படைப்புக்கள் வெளிவந்தன. போராட்ட வளர்ச்சியில் அவை குறிப்பிடத்தக்க பங்காற்றின. அக்காலத்தின் நிகழ்வுகளையும், எண்ணங்களையும் கொண்டிருந்தன. புதியோர், ஏற்கனவே இலக்கியப் பரிச்சயத்தில் இருந்தோர் என அனேகமானவர்கள் ஒத்து நின்றனர் எனலாம். இது, ஒடுக்குமுறை எல்லோரின் மீதும் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவாகவிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அம்சம் ஈழத்தின் இலக்கியப் போக்கில் நல்ல அடித்தளத்தைக் கொண்டதுடன், தமிழில் புதிய அனுபவமாகவும் இருந்தது. புதிய நூல்கள் கவனிப்புக்கேற்ப வெளிவந்தன. இந்த அவதானிப்புக்களை தமிழகத்தின் விமர்சகர்கள் கூட பிரமித்தபடி குறிப்பிட்டிருந்தார்கள்.

எனினும், இந்தப் போக்கானது சரிந்து 80 களின் கடைசிப் பகுதியில இருந்து இன்று வரை ஒரு மந்த நிலையில் காணப்படுவதை உணர முடிகிறது. ஆனால், மறு பக்கத்தில் இவ் ஒடுக்கு முறையின் தீவிரம் இன்று ஆகக் கூடுதலாக அதிகரித்துள்ளது. போராட்டத்தின் வளர்ச்சி பாய்ச்சலெடுக்க, சிங்கள அரசு எங்களின் மீது கீழ்த்தரமான முறைமைகளில் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. மனித நியாயங்களுக்கு, உணர்வுகளுக்கு முகங்கொடுக்க முடியாத போது அரசின் காழ்ப்புணர்ச்சியானது எங்களை அழிப்பதாகவும், நெருக்கடிகளை இறுக்குவதாகவுமே இருக்கின்றது. மக்களைத் திறந்த வெளிக் கைதிகளாக்க முனையும் நடவடிக்கை, மனிதப் படுகொலைகள், குடியிருப்புப் பிரதேசங்களை இராணுவப்பரப்பாக்கி மக்களை விரட்டுதல், தொழில் மற்றும் மின்சாரம், போக்கு வரத்து வசதிகளைத் தடுத்தல் ( முடமாக்குதல் ) எனும் வாழ்க்கையின் அடிப்படை வளங்களை நேரடியாகப் பறிக்கும் நாசகார நடவடிக்கைகள் ஒவ்வொரு மனிதரிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன. இவற்றை எதிர் கொள்ள வேண்டிய அவசியமும், அவசரமும் ஒவ்வொரு தமிழ் மக்களுக்கும் ஏற்படுகின்றது. இவ்வாறானபோது விரும்பியோ விரும்பாமலோ யுத்தம் குழந்தைகளில் இருந்து முதியோர்வரை வேறுபாடின்றி, சோற்றிலிருந்து திருமணப் பிரச்சனை வரை சகல மட்டங்களிலும் தன் விளைவை ஊன்றுகின்றது.

எனவே இந்த நாட்களில் கலை, இலக்கிய வெளிப்பாடுகள் இவற்றை எதிர் கொள்வதில் மிகப் பிரதானமடைய வேண்டியிருக்கிறது. விடுதலைப் போராட்ட வரலாறுகளின் போது எவ்விதம் கலை, இலக்கிய வெளிப்பாட்டு அமைவுகள் போராட்டத்தில் பங்காற்றினவோ, அவ்விதமான நிலை நமக்கும் அவசியமானது இயல்பு. சமூகக் கரிசனையும், மனித நேயமும் கொண்ட கலை, இலக்கியவியலாளர்களின் எதிர்ப்புக் குரலானது நிதானமாக உரத்து ஒலிக்க வேண்டியுள்ளது. ஆனால், 80 களின் இறுதிப் பகுதியில் இருந்து இப்பொழுது வரையான நான்கைந்து வருடகாலத்தில் போராட்ட கலை, இலக்கியங்களின் வெளிப்பாடு அல்லது பரவல் என்று அவதானிக்கும் போது இன்னும் அதிகமாகவே வெளிக்கிளம்பியிருக்க வேண்டும் என்ற உணர்வே மேற்கிளம்புகிறது. இந்தக் காலங்களில் வெளிவந்த படைப்புகளின் தொகை, தரம் என்பன குறைவு என்பதாகவே படுகின்றது.

90 யூனில் இரண்டாம் கட்ட ஈழப் போர் தொடங்கிய பிறகு ஏற்பட்ட நிலையில், பத்திரிகைத் தாள் தட்டுப்பாடு, அச்சு வசதியில் முடங்கல், தொடர்புகளில் தடை... என மொத்தமாக பிரசுர வசதிகளில் சிரமம் என்றிங்கு ஏற்பட்டுள்ளதும் கவனிக்கத் தக்கது எனினும், வழமையாக வெளிவந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் தொடர்ந்தும் வந்து கொண்டேயிருக்கின்றன புதிதாக ''சாளரம்'' ''வெளிச்சம்'' ''ஆதாரம்'' ''மாற்றம்'' 'நங்கூரம்' என்ற சஞ்சிகைகளும் வெளிவந்து கொண்டிருக்

கின்றன. சில புதிய நூல்களும் சகல அழுத்தங்களையும் மீறி இக் காலத்தில் வெளிவந்துள்ளன; வந்து கொண்டிருக்கின்றன.

இன்னொரு பக்கத்தில், அரங்கக் கலைகள் முன்னரை விடவும் அதிகமான செயல் முறைகளில் இப்போது இருப்பதை அவதானிக்க முடிகிறது புதிய நாடகங்கள், நாடக முயற்சிகள், பட்டறைகள், விமர்சனங்கள், பரவலாகவும், திறனாகவும் நிகழ்கின்றன. இசைப் பாடல்கள் புதிதாகவும், இசை முயற்சிகளின் நம்பிக்கை யூட்டக் கூடியனவுமாக விருத்தியடைகின்றன. ஓவியங்கள் போராட்டச் சித்திரிப்புக்களையும், புதிய சிந்தனைகளையும் கொண்டுள்ளனவாகக் காணப்படுகின்றன. யுத்த விமானங்கள் கலவரமூட்டும் அதிர்வுடன் பறக்கும் போதும் இவை நிகழ்கின்றன. புகைப் படங்கள் பற்றிய அக்கறையும், வீடியோப் படங்களும் கவனம் கொள்ளத்தக்கதாக இருக்கின்றன.

இவ்வாறான நிகழ்வுகள் கலை முயற்சிகளாக இருக்கும் போது எழுத்துப் போக்குகளில் ஏன் மந்தநிலை எனக் கேள்வி எழுகிறது.

பல விடுதலைப் போராட்டங்களின் போது எழுந்த படைப்புக்களைப் பார்த்திருக்கின்றோம். ஒடுக்கு முறைக்கெதிராக அவையாற்றிய பணிகளையும், போராடிய மக்கள் அனுபவித்த துயரங்களையும் அறிந்திருக்கின்றோம். அவற்றினூடாக அம்மக்கள் எழுச்சி கொண்ட விதங்களையும் தெரிந்துள்ளோம். அவ்வாறான போதிலெல்லாம் சகிப்புக்கு மீறிய இன்னல்கள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டு கலைஞர்கள் மக்களுடனும், போராட்டத்துடனும் இணைந்து நின்றார்கள். தம்மையே ஒடுக்குமுறையாளர் காவு கொண்ட போதும், மக்களுக்கான சுதந்திரத்துக்காக தமது குரலை, செயலை உறுதியாகத் தந்திருக்கிறார்கள். அவர்களின் கால உணர்வுகளை, நிகழ்வுகளைப் பதிவு செய்தார்கள். தமது பிரச்சனைகளை, நியாயத்தை உலகுக்குப் புரிய வைத்தார்கள்.

நாங்களும் ஒட்டு மொத்தமாகத் துன்பங்களை அனுபவிக்கின்றோம். இன்று துயரத்தின் புதல்வர்களாகியுள்ளோம். எனினும் போராடும் மக்களாக இருப்பதில் நிறைவு ஏற்படுகின்றது. இந்த வாழ்வுக்கு அர்த்தம் இருக்கின்றது. எங்களது துயரங்களின் முற்றுப்புள்ளி விடுதலையில்த்தான். சுதந்திர மனிதராக வாழ்வதற்காக அனைத்தினூடாகவும் செயல்பட வேண்டிய கடமை எமக்குள்ளது.

ஆகக் கூடுதலான சுமைகளைத் தாங்கிக் கொண்டு 'நாளை நமதே' என்ற நம்பிக்கையுடன் வாழ எண்ணங் கொண்டவர் நாம். இந்த நம்பிக்கை தான் வ ழ்க்கை. இந்த நம்பிக்கையின் அடிப்படையிலான வாழ்க்கைக்கான போராட்டம் தான் இது. எனவே எங்களது துயரங்களைக் காலத்தின் சாட்சியாக்குவோம். எம் மீது கவிழ்க்கப் பட்டுள்ள அநீதியை உலகுக்கும் எமது மக்களுக்கும் வெளிப்படுத்துவோம். சுதந்திர வாழ்க்கைக்கான இந்தப் போராட்டத்தில் எங்களின் குரல் ஒலிக்கட்டும். எங்களது முகங்கள் தெரியட்டும். கலை, இலக்கியங்களின் செழுமையின் மூலமாக எங்களது தேசிய அடையாளங்களைக் காப்போம். மொழியை, தாயகம் மீதான பற்றுணர்வை வளர்க்கத் தளமாகுவோம். நமது காலத்தில் இவை எமக்கான புறந்தள்ள முடியாத பணியாகும்.

இந்த விடயங்களைப் பற்றி அண்மையில் இலக்கிய நண்பர் ஒருவருடன் பேசிக் கொண்டிருக்கும் போது அவர் சொன்னார்:

''நான் மனித நேயம் மிக்கவனாக இருந்தேன். சமூகத்தின் மீது அக்கறையும், கலை வெளிப்பாடுகளில் கரிசனையும் மிக்கவனாக இருந்தேன். நெறியான சமுதாயம் ஒன்று ஏற்பட வேண்டும் என்பதில் மிகுந்த ஆவலுடையவனாகவும் இருந்

தேன். ஒட்டு மொத்தமாக எனது சிந்தனைகள் எப்பொழுதும் சுகந்திர மனிதர்களாயும், நல்ல சமுதாயமாகவும் நாங்கள் இருக்க வேண்டும் என்பதில் தான் அக்கறை கொண்டிருந்தன. ஆனால், என்னால் சமுதாயத்திலோ போராட்டத்திலோ இறங்கி வேலை செய்ய முடியவில்லை. எனவே எனது சிந்தனை ஆரோக்கியமானதாக இருந்தாலும் எனது செயற்பாட்டின் தன்மை காரணமாக இந்தச் சமுதாயத்துக்கும், காலத்துக்கும் பூரணபயனைக் கொடுக்க முடியாதவனாகி வருகின்றேன். ஒன்று மட்டும் புரிகிறது. இந்த நிலையில் இன்றைய நாட்களில் வெறுமனே மேசையில் இருந்து கொண்டு ஒரு கவிதை கூட எழுத முடியாதுள்ளது என்பது''.

இவ்வாறு எண்ணங்கிளர்வது அவரைப் பொறுத்தவரையானதாக இருந்தாலும், இந்த மண்ணில் தன்னை நிலைப்படுத்தி வாழ்வதே தன்னையுமறியாமல் போராட்டத்துடன் அவர் இணைந்து கொள்ளுவது இக் காலத்தன்மையாகும். இந்த நிலையில் அவர் இன்னும் ஒடுங்கிப் போகாது, சமகால நிகழ்வுகளுடன் இணைய வேண்டும். இப்படிப் பன்நிலைப்பட்ட சூழ் நிலைகளில் இருக்கும் அனைவரிலும் ஏற்பட்டிருக்கும் நீடித்த மௌனத்தை கலைப்போம். இன்றைய இலக்கியங்கள் இரத்தத்தில் தொட்டு துப்பாக்கி முனைகளால், உணர்வுடன் எழுதப்படுகின்றன போராளிகளால். இந்தப் படைப்புகளின் ஜீவகளையும், புரட்சிகர உத்வேகமும் எமது விடுதலைப் போரை முன்நகர்த்துகின்றன. இந்த விடுதலைப் போராட்டத்தில் நேரடிப்பங்கு வகிக்காத படைப்பாளிகளிடமும் இந்த மண்ணில் சிந்தப்படும் குருதியின் மணம் அவர்களின் மூக்குத்துவாரங்களில் ஏறுகின்றது. காற்றில் கலந்து வரும் கந்தகநெடி சூழலை உணரவைத்திருக்கும். புலன்களை அதிர வைக்கும் வெடியொலிகள் வாழ்க்கையையும், இந்தக் காலத்தையும் ஞாபகப்படுத்துகின்றன. எல்லாவற்றையும் மீறி, பெறப்படும் வெற்றிகள் பல சந்தர்ப்பங்களில் நெஞ்சை கிளர்த்துகின்றன. இந்த அனுபங்களே கலை இலக்கிய வெளிப்பாடாக தோற்றம் கொள்ள வேண்டும். அனைவருக்குமான இந்தப் பணியை புரிந்துணர்வுடன் பகிர்ந்து கொள்வோம். □□

'வெளிச்சம்' பற்றிய உங்களின் கருத்துக்களை அறிய எமக்கு எழுதுங்கள். எல்லோரும் சேர்ந்து வெளிச்சத்தை இன்னும் வெளிச்சமாக்குவோம்.

தொடர்பு:-

ஆசிரியர்குழு, "வெளிச்சம்",

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்,

நடுவப் பணியகம்,

கோண்டாவில்.

# சாட்சியம்

— சயீதா கஸ்தர் —
[Saeeda Gasdar]

......மரியம், கேள் இதை
காதிஜா, பாத்திமா
கேளுங்கள் இதை
இன்னொரு சட்டம் இயற்றப்பட்டுள்ளது.
இதை நீங்கள் மனமார ஏற்றுக் கொள்ள வேண்டும்.
அதற்காக
நீங்கள் மிகவும் நன்றியுடையவராக இருக்க வேண்டும்.

நீங்கள் இல்லத்தரசி
குழந்தைகளுக்குத் தாய்,
எவ்வளவு அழகாய் இருக்கிறீர்கள் நீங்கள்
எவ்வளவு பாதுகாப்பாய், கௌரவமாய்
குனிந்த தலை நிமிராது
சேவை செய்து கொண்டு.

நிச்சயம் நீங்கள் சொர்க்கத்திற்குத்தான் செல்வீர்கள்
எனவே தான் உங்கள் நன்மைக்காகச்
சொல்கிறோம்;
''இரண்டு பெண்களின் சாட்சியம்
ஒரு ஆணின் சாட்சியத்திற்கு ஈடானது''
என்ன தான் இருந்தாலும்
நீங்கள் தனியாக வெளியே போவது சரியல்ல.
இது ஒரு தெய்வீக ஆணை
இதைத் தட்டிக் கேட்பவளோ சைத்தான்
சாகடிக்கப்பட வேண்டியவள்.

தெருக்களில் இறங்கி
உரிமைகளுக்காக,
சுதந்திரத்திற்காக
போராடுவதும் சண்டை பிடிப்பதும்
பெண்களுக்கு அழகல்ல
இது போக்கிரிகளின் செயல்தான்.

உங்களது மென்மையை ஏன் வீணாக்குறீர்கள்
உங்கள் சக்தியை ஏன் வீணடிக்கிறீர்கள்

பாகிஸ்தானைச் சேர்ந்த சயீதா கஸ்தர் சிறுகதை எழுத்தாளரும், நாவலாசிரியரும் ஆவார். அத்துடன் மிகச் சிறந்த கவிதைகள் பலவற்றை எழுதியுள்ளார். பெண்ணுரிமை இயக்கத்தில் முன்னணியில் நிற்பவர்.

நீங்கள் பீங்கான் பொம்மைகள்
அந்நியர் கண்பட்டால்
நீங்கள் சுக்கலாக உடைந்து விடுவீர்கள்.

......உங்களைப் பெற்றெடுத்த நான்
உங்களுக்கு முன் உண்மை பேச
கூச்சப்படுவேன் என்று
உங்களை நினைக்க வைத்தது எது?

நமக்கிடையே உள்ள
அன்பு, வெறுப்பு, மானம், இழிவு
ஆகிய பந்தங்களை நான்
வருணிக்க மாட்டேன் என்று
உங்களை நினைக்க வைத்தது எது?

பெண்ணின் உண்மையைக் கண்டு
உங்களுக்கு அச்சமா?
என்னைக் கோழை என்று நினைத்தீரா?
......உங்கள் தேவைக்காக,
மீண்டும் மீண்டும்
அடிமைக் கூட்டத்தை,
குருடர்களை, செவிடர்களை, ஊமைகளை
பெற்றெடுக்க நீங்கள் பயன்படுத்தத்தான்
எனது உடல் படைக்கப்பட்டதா?
உங்களைப் பேணுவது
எங்கள் பிள்ளைகளின்
புதைகுழியைத் தோண்டுவதற்குத்தான்.

எனவே, நாங்கள்
இரண்டு பெண்கள் அல்ல
இரண்டு கோடிப் பெண்கள்
இந்த அநீதிக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிராக
கூறுவோம் சாட்சியம்.

□□

# ஒருகதை

— கிஷ்வர் நஹீத் —
[*Kishwar Naheed*]

1940 இல் பிறந்த கிஷ்வர் நஹீத் பாகிஸ்தானின் மிக முக்கிய கவிஞருள் ஒருவர். அரசாங்கப் பதவியிலுள்ள இவர், வானொலியில் அறிவிப்பாளராகப் பணியாற்றுகிறார். பல சஞ்சிகைகளுக்கு ஆசிரியராக இருக்கும் இவர் கவிதைத் தொகுப்புகள் உட்படப் பல நூல்களை இயற்றியுள்ளார்; பெண்களின் உரிமைகளுக்காகப் போராடிவருகிறார்.

ஒரு ஆடுகுதிரையின் மீது
ஒரு குழந்தை ஆடுகிறது
அது மரக்குதிரை.
குழந்தையின் ஸ்பரிசம் அறியாதது
குழந்தை குதிரையை அடிக்கிறான்
தனது திறமையைக் கண்டு
தன்னையே மெச்சிக் கொள்கிறான்
அவன் வளர்ந்து பெரியவனாகிறான்
மரக்குதிரையில் மீண்டும் சவாரி —
—செய்கிறான்
ஒரு சடங்கின் மூலம்
தன் இளமையை அறிவிக்கிறான்.
இரவு கழிந்ததும்
குதிரை உருமாறுகிறது.
குதிரையை அடிப்பவன்
தன்னைத்தானே மெச்சிக் கொள்கிறவன்
மாறாமலேயே இருக்கிறான்;
எஜமானனாக
சவாரி செய்பவனாக
கணவனாக.

நன்றி: மண்ணும் சொல்லும்
(மூன்றாம் உலகக் கவிதைகள்)

(இரண்டு கவிதைகளும் ஆங்கிலம் வழி தமிழில் எஸ். வீ. ராஜதுரை, வ. கீதா)

"வெளிச்சம்"
கலை, இலக்கிய சமூக இதழ்

இதழ் அமைப்பு:
இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

ஓவியம்:
"தயா"

அச்சு:
ம. மரியதாஸ்

ஆக்கம்:
ஆசிரியர்குழு

வெளியீடு:
விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்

மழலையின் சிரிப்பு மனதுக்கு குளிர்ச்சி
மனதின் குளிர்ச்சி வாழ்வில் மலர்ச்சி

'குழந்தை களஞ்சியம்' மக்களுக்குச் சேவை
செய்வதிலும், உள்ளூர் உற்பத்திகளுக்கு முக்கியத்துவம்
வழங்கி, தேசிய நிறைவை ஏற்படுத்துவதிலும்
மகிழ்வடைகின்றது.

இறக்குமதிப் பொருட்கள்,
உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் களஞ்சியம்
நெல், அரிசி, உழுந்து, பயறு, மிளகாய்
மற்றும் தானிய வகைகள்
கொள்வனவாளரும், விற்பனையாளரும்
[கொமிஷன் ஏஜென்ற்]

குழந்தை களஞ்சியம்
யாழ் வீதி, கிளிநொச்சி.

முறிகண்டிப் பிள்ளையார் அரிசி ஆலை
என்றும் தரமான அரிசியையே உற்பத்தி செய்து
விநியோகிக்கிறது.

தரம் 1
தரம் 2
தரம் 3

என்ற வகையில்

குத்தரிசி
பச்சை அரிசி
தீட்டுப்பச்சை அரிசி

என தரமாக விரும்பியபடி நீங்கள் வாங்குவதற்கு

முறிகண்டிப் பிள்ளையார் அரிசி ஆலை
யாழ் வீதி, பரந்தன்.

# உணர்வு

— முல்லை யேசுதாசன் —

அவன் பாடசாலைக்குப் போய், எவ்வளவோ நாளாகிவிட்டது. தினமும் அவனைப் பாடசாலைக்கு அனுப்புவதற்கு அவனின் தாய் செய்த முயற்சிகள் எல்லாமே வீண். எப்போதோ நடந்த விமானத்தாக்குதலில் தன் நண்பனை இழந்து நட்பின்றி, துணையின்றி, விருப்பின்றி பாடசாலையை மறந்து இருந்தான்.

அவனுடைய மாமாவும் இயக்கத்தில்தான் இருந்தார். எத்தனை தடவை அவர் சொல்லியிருப்பார்,

''உந்த பம்பரை விழுத்துறன்பார்'' என்று. இன்னமும் அது குண்டுபோட்டுக்கொண்டே தான் இருக்கிறது. அவனுக்கு மாமாவிலையும் அவர் சேர்ந்த இயக்கத்திலையும் சரியான கோபம். பள்ளிக்கூடத்தில் டீச்சர் ''அதோ அதோ பம்பர் ஒண்டு......'' என்ற பாட்டை பாட ஆரம்பித்து, கடைசிவரியை ''பயந்து நாங்கள் பங்கருக்குள் படுத்திருந்தால் ஞாயமா.'' என்னும் போது அவனுக்குள்ளும் ரோசம் வரும்.

விமானம் எத்தனை குண்டு போட்டாலும், அவன் அம்மா எவ்வளவு கூப்பிட்டாலும், அவன் பங்கரில் ஒளிவதில்லை. அதை எப்படி வீழ்த்தலாம், என்று மட்டும் அந்த சின்ன மூளை யோசிக்கும்! மாமாவிடம் பலதடவை உண்மையாகவே கேட்டிருப்பான். ''மாமா உங்களுக்கு ஏலாவிட்டா உங்கட துவக்க தாங்கோ. நான் பம்பரை சுடுறன்'' என்று ''போடா நீ சின்னப்பெடியன். இதெல்லாம் நீ தூக்க மாட்டாய்'' என்று அவர் சொல்லும் போது அவனுக்கு பலமான கோபம் வரும். ஏமாற்றுகிறார் என்று நினைப்பான்.

தன்னுடைய நண்பனை பம்பர் குண்டுபோட்டு சாகடிச்சதைப்பற்றி அம்மாவோ, மாமாவோ கவலைப்படாமல் இருக்கினமே என்ற கோபம் அவனுக்கு இருந்தது. இந்த இயக்கம் பிளேனை விழுத்தாதோ என்று நண்பர்கள் கேட்டால், ''போங்கடா நானும் பம்பரை விழுத்துவன் என்னட்டை துவக்கில்லை'' என்பான் அவன். ''எண்டைக்காவது நான் பம்பரை விழுத்துவன்;'' என்று அடிக்கடி சொல்லுவான்.

'அடுத்த முறை மாமா வரேக்க கட்டாயம், துவக்கு கேக்கோணும். அல்லாட்டா துவக்கு ஒண்டு செய்து தரச் சொல்லோணும். அதுவரைக்கும் பள்ளிக்குப் போறதில்லை, என அவன் முடிவு செய்துவிட்டான். "டேய் பள்ளிக்கூடம் போடா" என்று அம்மா கெஞ்சும் போது, "மாமாட்டை துவக்கு வாங்கித்தாங்கோ இல்லாட்டி பம்பரச் சுடச் சொல்லுங்கோ" என்பான் அவன் மௌனமாகிவிடுவான்!

இம்முறை மாமன் வந்த போது அவரிடம் கெஞ்சிக் கூத்தாடி, பள்ளிக்கூடம் போவேன் என்று உறுதி சொல்லி ஒரு துவக்கு செய்து கொண்டுவிட்டான். அவர் தனக்கு தெரிந்த நெருப்பு பெட்டியினால் உராய்வு ஏற்படுத்தி, சத்தம் மட்டும் ஏற்படும்படியான, ஆபத்தில்லாத ஒரு துவக்கைச் செய்து கொடுத்து, ஒரு ஓணானையும் சுட்டுக்காட்டி சற்றுப் பெரிதான ஈபக்கடதாசியில் ஒரு குண்டையும் செய்து கொடுத்தார்.

அது 'பம்பரை சுடுமா?' என்று மனதுக்குள் சந்தேகப்பட்டு, இன்னொரு நண்பனைக் கண்டு விபரம் கேட்டான். அவன் நையாண்டி பண்ணினான். "போடா உதால என்னண்டு பம்பரை விழுத்துவாய். சும்மா பலகையில துவக்கு செய்துதந்து உன்னை மாமா ஏமாத்தியிட்டார்" என்றான் நண்பன். "போடா மாமா ஓணான் எல்லாம் சுட்டவர். எப்பிடிச் சுடுது எண்டு உன்னைச் சுட்டாத் தான் தெரியும்.' என்று அவனை நோக்கி துவக்கைத் திருப்ப அவன் பயந்து கத்த...... அந்தப் பையனுடைய தாய் இவனைப்பேச... துப்பாக்கியில் அவனுக்கு நம்பிக்கை வந்துவிட்டது.

'பம்பர் தனக்கு நேர் எதிராய் வரும் என்று காத்திருந்தான். குண்டு வீழ்ந்து, தன் நண்பனும், இன்னும் பலரும் இரத்தவெள்ளத்தில் துண்டு .. துண்டாய்.. அவன் எண்ணங்களில் வந்து போனார்கள். ஆச்சியின் திட்டும் ஆர், ஆரோவின் கதறலும் வந்து போனது. மெல்ல மெல்ல ஆக்ரோசங்கள் மனதில் எழும்பக் காத்திருந்தான். கட்டாயம் வரும் அது. கட்டாயம் சுடுவன்.

ஒருநாள் 'பம்பர்' வந்தது. தூரத்தில் குண்டுச் சத்தம், தயாரானான். இலக்கு வைத்தான். சுட்டான். குண்டு பட்டது என்று சந்தோசம். மாமாவை நினைத்தான். 'அவர் அதை வீழ்த்தாவிட்டாலும், அவற்ற துவக்காலதான் நான் சுட்டன். என்ர நண்பனை கொண்ட பிளேனை சுட்டுப்போட்டேன்' கத்தினான். அம்மாவிடம் ஓடி, சொல்லி, சந்தோசப்பட்டான். மீண்டும் அவன் பள்ளிக்கூட வாசலில். மாமா வந்தார்.

மாலை, அவள் அம்மா வரவேற்றாள் "என்னக்கா மருமகன் பள்ளிக்கூடம் போறானே?" மௌனமாகக் கேட்டார் "போறான் ஆனா நீங்கள் பம்பரை விழுத்தேல்லை. நீ கொடுத்த துவக்கால உன்ர மருமகன்தான் பம்பரை சுட்டுவிழுத்தினவன் தன்ர நண்பனைக் குண்டு போட்டுக் கொண்ட அதை அவன் தான் விழுத்தினவன். இதை நாங்க நம்பத்தான் வேணும். இல்லையெண்டா அவன் பள்ளிக்கூடம் போகமாட்டான்." என்று சிரித்தாள்; அவன் அம்மாவோடு மாமாவும் அதனை ஒப்புக்கொண்டு மனதுக்குள் சிரித்தான்.

□□

## சர்வதேச ?
## வீடமைப்பு

சர்வதேச வீடமைப்பு
டும் டும் டும் ......கண்டிய நடனம்
சகலருக்கும் வீடமைப்பு
டும் டும் டும் ...... தேசிய நாடகம்

கட்டு கட்டு......பிரமா கட்டு
கட்டுவனில்...... கட்டுவனில்
பிரம்ம ராட்சதர்
இடி இடி இடி

தனதன தனன தனதனதனன
தனதன தனன தனதனனா
வசந்தன் ஆடி மகிழ்ந்த பூமியில்

டாங்கு டாங்கு டகு
டகு டகு டகு டகு
வீடும் சுடலையும் ஒண்டாய்ப் போச்சு..
மயான காண்டம் மயான காண்டம்...

''பதி எழு அறியா
பழங்குடி'' வாழ்க்கை
பரதேசிகளால்
போச்சு...... போச்சு......
தர்மம் பேசி
பேசிப் பேசி
தமிழன் பூமியில்
'கழுகுக்' குண்டு

சர்வதேச பயங்கரவாதம்
சர்வதேச வீடழிப்பு!

— என் சண்முகலிங்கன் —

நன்றி: சந்தனமேடை

பலசரக்குப் பொருட்கள்,
உள்ளூர் உற்பத்திப் பொருட்கள்,
நவதானியங்கள்,
கொள்வனவு விற்பனவு வர்த்தகர்கள்.

# Rajkumar Traders

*உள்ளூர் உற்பத்திப் பொருட்களை வாங்கி உபயோகிப்பதன் மூலம் சுதேசியப் பொருள் உற்பத்தி பெருகும். குறைந்த செலவுடன் நிறைந்த பலனையும் பெறலாம். நாட்டின் விடுதலைக்கு தன்னிறைவுப் பொருளாதாரம் பிரதான காரணம். உள்ளூர் உறபத்திப் பொருட்களைப் பாவிப்பதன் மூலம் சுதேசியப் பொருள்களின் உற்பத்தியை ஊக்குவிப்போம்.*

கிளிநொச்சிப் பகுதியின்
முன்மாதிரி விற்பனை நிலையம்

# ராஜ்குமார் ரேடர்ஸ்

யாழ் வீதி, கிளிநொச்சி.

# எண்பதுகளில் ஈழத்துத் தமிழ்க் கவிதைகளின் போக்கு

— சொக்கன் —

பொதுவாக இலக்கியத்தை மூன்று பிரிவுகளுள் அடக்கலாம். குறிப்பிட்ட ஒருகாலப்பிரிவிலே தோன்றி அக்காலத்து மக்கள் தேவைகளை நிறைவு செய்வன முதற்பிரிவுள் அடங்கும். இவை காலத்தோடு ஒட்டியவை. கால உணர்வின்றி மக்கள் தேவைகளையும் உளங்கொள்ளாது ஆக்கப்படுவன இரண்டாம் பிரிவுக்குரியவை. இவற்றைக் காலத்துக்கு முரணானவை எனலாம். எக்காலத்துக்கும் உரியன வான விழுமியங்களைத் தம்மகத்தே கொண்டு, நிலைபேறுடையவையாய் விளங்குவன மூன்றாம் பிரிவைச் சாரும். இவற்றை நிலையான இலக்கியம் எனலாம். மக்களின் எண்ணங்களும் விழுமியங்களும் காலந்தோறும் மாறுவதால், இயங்கும் உலகிலே நிலையானவை என்று எவையும் இல்லையென்பர், மூன்றாம் வகையான இலக்கியம் எதுவும் இல்லையென்பர். எனினும் நாம் திருக்குறள், கம்பராமாயணம் முதலாம் இலக்கியங்களை இன்றும் படித்துச் சுவைக்கத் தவறுவதில்லை என்பதையும் மறுத்தற்கில்லை.

இலக்கிய வடிவங்களுள்ளே பழமையானதும் முதன்மையானதும் கவிதையே. இதன் முதன்மைப்பாடு பற்றிய பின்வரும் கூற்று நினைவுகூரத்தக்கது. ''கவிஞனின் கலை (கவிதை) நம்மைப் பற்றிய உண்மையான அளவு மதிப்பீட்டினைத் தராவிட்டால், நாம் நம்மைச் சரிவர அறிந்துகொள்ள முடியாது.'' எனவே நாம் நம்மை எக்காலத்தும் 'அளவு மதிப்பீடு' செய்ய வேண்டியிருப்பதால், கவிதையின் தேவையும் என்றும் நமக்கு இருந்து கொண்டேயிருக்கும். உரைநடைவாயிலாகப் பல திறத்தனவான ஆற்றல் இலக்கியங்களும் (Literature of Power) அறிவிலக்கியங்களும் (Literature of Knowledge.) பெருமளவு வெளியான போதிலும், கவிதையானது தனது மரபுவழிப்பட்டனவும், புதியனவுமான வடிவங்களில் அளவிறந்து பெருகிக் கொண்டே இருக்கின்றது. ஆனால் இப்பெருக்கத்தினிடையே, 'பாசி எது முத்து எது' என்று மதிப்பிடுவதுதான் திறனாய்வாளனுக்குள்ள அறைகூவல். இவ்வகையிலே 1980—90 வரையுள்ள பத்தாண்டுக்காலத்தில், தமிழீழத்திலே வெளியான தமிழ்க் கவிதைகளை ஆய்வடிப்படையில் மதிப்பீடு செய்ய முற்படுவதில் உள்ள அருமைப்பாட்டினை நான் உணர்ந்தேயுள்ளேன். இருப்பினும் என்னாலியன்ற அளவு காய்தல் உவத்தலின்றி இப்பணியினைச் செய்ய முற்படுகின்றேன்.

கவிஞன் ஒருவன் தான்வாழுகின்ற காலத்திலே தன்னைச் சூழவுள்ள மக்கட் கூட்டத்தின் நிறைகுறைகளைக் கவிதை யென்ற ஊர்திவாயிலாக அதன் உள்ளங்களிலே உறுத்தும்வண்ணம், அதேபொழுது கவிதைக்குரிய சுவையும் மகிழ்வளித்தலு மாகிய பண்புகள் குறைவுபடாது எடுத்தியம்ப வல்லவனாயின் அவனை நாம் சிறந்த கவிஞன் என்று போற்றுவோம். இதற்கு அவனுடைய மானிடமும் அம்மானிடத்தால் அமைவதாகிய மானிட நேயமும் இன்றியமையாதனவாகின்றன. இதனோடு மானிடரில் தானும் ஒருவனே என்ற உணர்வோடு, அவர்கள் வாழ்வதற்கென நடத்தும் போராட்டத்திலே தானும் பங்காளன் என்ற நினைவும் செயலும் உறுதுணையாவன.

ஆய்வுக்கென எடுத்துக்கொண்ட இப் பத்தாண்டு காலத்தில் கவிதையாக்கி வரும் பெரும்பாலான கவிஞர்களிலே, இத்தகைய உணர்வும் செயலுந்தலும், மிளிர்வது சிறப்பாகும். இக்காலப் பகுதி ஈழத்தமிழரைப் பொறுத்தவரை எவ்வாறுள்ளது என்பதை விளக்கவேண்டுவதில்லை. எனினும் கவிஞன் ஒருவன் இக்காலம் பற்றிக் கூறுவதையும் எடுத்துக்காட்டுவது பயனுடையதே. அவன் கூறுகின்றான்:

''எமது நிகழ்காலம் கொடூரமான இராணுவ அடக்குமுறைகளின் உச்சங்களையும், அவற்றுக்கெதிராகப் பல்வேறு வடிவங்களிலும் வெடித்தெழும் போராட்டங்களையும் வரலாறாக்குகிறது.''

''அநீதி, துயரம், அறிவும் நியாயமும் கூடச் சுமந்து கொள்ளமுடியாத அளவுக்குப் படுகொலைகள், தங்களுடைய சொந்த மண்ணிலிருந்து வேர்கள் பிடுங்கி எறியப்பட்டு அகதிகளாய் வெளியேறுகின்ற மக்கள், எல்லைப் புறங்களில் எரிந்து கொண்டிருக்கும் எமது வீடுகள், வயல்களிலிருந்து இன்னும் அடங்காத புகை, இன்னும் அடங்காத நெருப்பு - இவையே சூழலின் யதார்த்தம்''

இந்த நடப்பியலை (*Realism*) 'எழுதாத கைஉலக்கை' என்ற கூற்றும் முற்றிலும் பொருந்துவதே. மேலே தரப்பட்ட கூற்று 1985 இல் தமிழீழ மக்களின் நிலையை எடுத்துக் காட்டுவது. இன்றோ நிலைமை மேலும் மோசமாகிச் சொல்லாலே விளக்க முடியாத அளவுக்குப் பெருந்தீயாய், எரிமலையாய்த் தீக்கொழுந்துகள் கக்கிக் கொண்டேயிருக்கின்றது. இத்தகைய மாபெரும் கொடுமைகளுக்கு நடுவிலே தமிழீழத் தவரதும், அவர்களில் ஒருவனாயுள்ள கவிஞனதும் கடமைகள் இருமுகப்பட்டனவாகின்றன. ஒன்று போராட்டத்திற்குப் பங்களிப்பு; மற்றது இவ்வளவிற்கும் நடுவிலும் பாரம்பரிய விழுமியங்களை எந்த இடர்வரினும் தாங்கியவண்ணம் காப்பாற்றி அடுத்த தலைமுறைக்குக் கையளித்தல். இதுபற்றியும் அக்கவிஞனின் கூற்றினையே நினைவுபடுத்தல் பொருத்தமானது.

''ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் என்ற வகையில் எமது போராட்டம் தேசத்தை - அதனுடைய பௌதிக அம்சங்களில் மட்டுமே மீட்பது என்று பொருள் கொள்ள முடியாது. மாறாக, எமது மொழி, எமது நிலம், எமது கலைகள், எமது இலக்கியம் கலாசாரம் இவையனைத்தினதும் சுதந்திரமான விகசிப்பை உருவாக்கும் ஒரு போராட்டம் ஆகும். அந்நிய ஒடுக்குமுறை என்பது எமக்கென்றொரு பலமான பாரம்பரியச் செழுமைமிக்க கலாசார வாழ்வு இருக்கிறவரை வெற்றிபெறமுடியாது.''

எனவே இக்காலகட்டத்திலே, கவிதை என்ற சிறந்ததொரு வெளிப்பாட்டுக் கருவியினைப் பயன்படுத்தும் திறன்வாய்ந்த கவிஞனானவன், போராட்ட உணர்வினைக் குடிபோகவிடாது அதன் விளைபயனை மக்கள் பெறும்வரை தன் குரலை எழுப்பிக் கொண்டே இருப்பதோடு, பாரம்பரியச் செழுமைமிக்கதும், பலமானதுமான கலாசாரத்தினைப் பேணிக்காத்தற்கும் உந்து சக்தியாய் அமைதல் வேண்டும். இவ்வகையிலும் நம் கவிஞர்களிற் பலர் தமது

பங்களிப்பினைச் செய்து வருவது பாராட்டப்படவேண்டியதே.

இவ்வாறு நோக்குகையில், இப் பத்தாண்டுக் காலத்தெழுந்த கவிதைகளைப் பின்வரும் பிரிவுகளுள் அடக்கி ஆராய்வது பயனுடையதாகும்.

1 போராட்டத்தை உந்துவித்துச் செயற்பட வைக்கும் கவிதைகள்

இவற்றை இரண்டு துணைப்பிரிவுகளுள் அடக்கலாம்.

அ) போரோடு நேரடியாகத் தொடர்பு கொள்ளாது, அதன் தேவையையும் அதற்கு உந்துதலையும் வழங்கும் கவிஞர்கள் யாத்தவை.

ஆ) போர்க்களத்திலிருந்து தாங்கிய வண்ணம் களத்தையும், கவிதையையும் இருகண்களாகப் போற்றும் போராளிகள் யாத்தவை.

இவ்விருசாராரையும் முறையே வெளிக் கவிஞர்கள், களக்கவிஞர்கள்' என்று கவிஞர் இ. முருகையன் பிரிவுசெய்வது பொருத்தமுடையதே.

2. பெண்ணடிமைத்தனம், சீதனக் கொடுமை, உயர்வு தாழ்வு பேசல், நெருக்கடிக்காலத்தைப் பயன்படுத்திக் கொள்ளை, கொலை, கள்ளச் சந்தை யாகியவற்றில் ஈடுபடுவோரின் ஊழல் களை வெளிக்கொணரும் ஆக்கங்கள்.

3. தமிழர்தம் கலைகளைப் போற்றி அவற்றின் பழம்பெரும் சிறப்பினையும், இன்றைய இழிதகைமைகளையும் புலப்படுத்தும் ஆக்கங்கள்.

4. வழமையாய் அமைந்த சிறுவர் பாடல்கள். இப்பாடல்களூடாகவும் இளங் குருத்துக்களான குழந்தைகளுக்கு நிகழ் காலத்தின் கொடுமைகளை, அவற்றிற்கான அடிப்படைகளை உணர்வோடு வெளிப்படுத்தும் பாடல்களும் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதே.

5. ஆன்மீகம், இறையியல் பழமை சார் பாடல்களாயும், சிற்றிலக்கியங்களாயும் வெளிவந்துள்ளவை. நிகழ்கால உணர்வுடையோர் ஆங்காங்கே அவற்றிற்கும் சிறிதே இடமளித்துள்ள பாடல்களும் இவற்றினிடையே காணப்படும்.

இவை யாவற்றையும் தொகுத்து நோக்கும் பொழுது இக்காலகட்டக் கவிஞர்களில் மிகப்பெரும்பாலோர் நேரடியாகவும், ஒரு சிலர் மறைமுகமாகவும் நிகழ்காலத்து உணர்வுகளை எடுத்தியம்புவதிலே முனைப்புடையவராகவே உள்ளனர் என்பது மறுக்கவியலாத உண்மையாகும்.

இவ்வகையில் எனது ஆய்விற்கு எடுத்துக்கொண்ட நூல்களைப் பின்வருமாறு வகையும் தொகையுமாகத் தருகிறேன்.

1. போராட்டத்தோடும் அதன் விளைவுகளோடும் இணங்காட்டுவன.

அ) வெளிக்கவிஞர்கள் பாடிய நூல்கள்: 27

ஆ) களக்கவிஞர்கள் பாடிய நூல்கள்: 05

2. சமூகஊழல் சார்ந்தன எனக் கொள்ளத்தக்கன:

அ) கவிதை நாடக நூல் 01

ஆ) சிறுவர் பாடல்கள் 24

இ) இசைப்பாடல்கள் (எழுச்சிப்பாடல்கள்) ஆன்மீகம், இறையியல் பழமை சார்ந்தவை 23

இவை மட்டுமே இக்காலகட்டத்தில் எழுந்த நூல்கள் என்பது பொருளன்று. எனது கைக்கெட்டாமற் போனவையும் பல

உளவாகலாம். இங்கு காட்டப்பட்ட சில நூல்களிலுள்ள கவிதைகள் 1991 இலோ, 1992 இலோ வெளியானவையாய் இருந்தாலும், அவை இவ்வாண்டுகளுக்கு முன்பே செய்தித்தாள்களில் வெளியாகித் தொகுப்பிலே சேர்க்கப்பட்டனவாகும். செய்தித்தாள்களிலே வெளியானவற்றை ஆய்விற்குக் கொள்ளவில்லை; அவற்றைச் சேர்ப்பின் இவ்வுரை தனது எல்லை கடந்து செல்லும் என்பதால். இவற்றையெல்லாம் ஒட்டுமொத்தமாகக் கொண்டு பார்க்கையில், சமகாலப் போராட்ட உணர்வானது இக்காலகட்டத்திலே எல்லாக் கவிஞர்களிலும் தனது செல்வாக்கினைச் செலுத்தியுள்ளது என்பது பெறப்படும். இவற்றில் மரபுக் கவிதைகளும் உள்ளன; புதுக்கவிதைகளும் பெருமளவு இடம்பெற்றுள்ளன. இதனோடு மற்றொரு பொதுமைப் பண்பும் இவற்றிலே கவனிக்கத்தக்கதாகும். அது இவற்றிலே காணப்படும் எளிமைப் பண்பே.

பாட்டுப்பற்றி ருஷ்யக்கதையாசிரியரான ஃபியோடோர் டோஸ்ரோயெவ்ஸ்கி (*Fyodor Dostoyevsky*) ''அப்பாடல்கள் எளிமையிலும் எளிமையானவை. ஆனால் அவை அவர்களின் உள்ளங்களிலிருந்து வந்தவையாதலால் உள்ளங்களை அசைத்தன'' என்பார். இக்காலகட்டப் பாடல்கள் பலவும் பாடியவரின் உள்ளங்களிலிருந்து தோன்றியவையாதலாலே பாடுபவரின் உள்ளங்களையும் அசைக்கின்ற ஆற்றல் பொருந்தி விளங்குகின்றன.

''எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு, இவற்றினையுடைய காவியம் ஒன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோன் ஆகிறான். ஓரிரண்டு வருஷத்துக்கு நூற்பழக்கம் உள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்'' என்னும் பாரதியார் வாக்குக்கும் இசைவாகவே இக்காலகட்டக் கவிஞர்களின் பாடல்கள் - கவிதைகள் அமைந்திருக்கின்றன.

எனினும் கவிதைக்கு வேறொரு முகமும் உண்டு என்பர். ''...கருத்துக்களும் உணர்வுகளும் படிமங்களினூடு வெளிப்படுத்தப்படும்போதுதான் ஒரு கவிதை சிறந்த கவிதையாகின்றது.'' என்பது அத்தகையோரின் கருத்து. படிமம் என்றால் என்ன? அது ஈழத்துக் கவிஞரின் கவிதைகளில் எந்த அளவிற்கு இடம்பெறுகின்றது என்பதைப் பின்னர்க்காண்போம்.

இலங்கையைத் தம் தாயகமாகக் கொண்டு அகண்டதேசியம் பேசியோரும், வர்க்கபேதம், சாதிக்கொடுமை பற்றிப் பேசியோரும் அவற்றைக் கவிதைக் கருப்பொருளாக வரித்தோரும் இக்காலகட்டத்தில், சமகால உணர்விற்கும் தேவைக்கும் முகங்கொடுத்தமையின் வெளிப்பாடுகளையும் இக்காலகட்டக் கவிதைகளிலே பரவலாகக் காணலாம்.

மொழியைத் தாம் நினைத்தபடி வளைத்து, வசைக்கமுடியாதவர்களும், கவித்துவ ஆற்றல் கைவரப் பெறாதவர்களும், உணர்வின் வெடித்துவரும் வெளிப்பாட்டினை அடக்கமுடியாது 'ஆசைபற்றி அறை' யலுற்ற நிலையிலே இக்காலகட்டக் கவிஞர்களாய்த் தம்மை இனங்காட்டுவதும் ஒன்று. மரபுவழிக் கல்வியறிவை முதுசொமாகக் கொண்டு காரிகை கற்றுக் கவிபாடும் திறம்பெற்றவர்களும் பாடல் செய்திருக்கிறார்கள் என்பதற்கும் வேண்டிய எடுத்துக் காட்டுகள் உள்ளன. இவற்றையெல்லாம் விரிக்கிற் பெருகும். எனினும் இக்காலகட்டக் கவிதைகள் பற்றிய இனிவரும் விளக்கத்திலே வகை மாதிரிகளாகச் சில காட்டப்படும்.

(இன்னும் வரும்)

# நிமிரும் எங்கள் தேசம்

— ஜெயா —

நேற்றோர் நீள் இரவில்,
விழிகனக்க;
கால்கடுக்க;
ஆழ்கடலின் நீளக் கரைப் பரப்பில்,
நண்டு வந்து வளை அமைத்து,
ஒடுங்குகின்ற மணற்பரப்பில்,
அரண் அமைத்து;
எதிரிவரவை எதிர்நோக்கி;
நிலையெடுத்து நின்ற வேளை,
நடுங்குகின்ற பாதங்கள்;
நிலம் தொட மறுக்கின்ற;
நிலைமையையும் பாராது,
ஒடுங்குகின்ற நிலைவெறுத்த,
ஒரு அன்னை;
மூதாட்டி;
அவள் அருகில் வந்து;
கேட்டாள்.
''பிள்ளைக்கு உணவு வேளைக்கு வந்ததுவோ?
சோறும்;
புளிமாங்காய் போட்ட;
சிறுமீன் குழம்பும் நான் தரட்டோ?
வாங்கோ'' என்று நின்றாள்.
''நாளைக்கு;
நானிந்த மண்ணில் நாறிப் போகாமல்...
என்வீட்டில் தலை சாய,
என் சுடுகாட்டில் நான் வேக,
இன்றைக்கு வாழுகின்ற சித்திரங்கள்;
போங்கோ,
போய்க் கொஞ்சம் காலாற இருங்கோ;
பானையிலை,
சட்டியிலை,
இருக்கிறதெல்லாம் உங்களுக்கே,
மீதமில்லாமல் ஒரு வழி பாருங்கோ''
''இமைக்க மறந்திருந்த,
விழிமூடி,
கொஞ்சம் படுத்திருங்கோ,
பொழுது விடிகின்ற வேளை வரை,
நான் பார்ப்பேன்,
போங்கோ'' என்று அவள்,
தலையைக் கோதி விட்டாள்.
தேசத்தின் வருடலில்,
அவள் சிலிர்த்தாள்.
தேசத்தின் உறவில் நிமிர்ந்தாள். □□

# பெண்களின் பொருளாதார — வளர்ச்சியும் பெண்கள் அமைப்புக்களின் பணியும்

— சுடரவள் —

ஐரோப்பியர் வருகையால் எமது தாயகத்தின் தேசியப் பொருளாதாரக் கட்டமைப்பு உடைக்கப்பட்டு கடந்த மூந்நூற்றுக்கு மேற்பட்ட ஆண்டுகளில் அது படிப்படியாக அழித்தொழிக்கப்பட்டது.

தொடர்ந்து சிங்களப் பேரினவாத அரசின் பொருளாதாரத் திட்டங்களும் எமது தேசிய பொருளாதாரக் கட்டமைப்பை வளர்க்கவில்லை; மாறாக சிங்களப் பேரினவாத அரசின் நலனைமையப்படுத்தியே அமைந்திருந்தன.

தொடர்ச்சியாக இருந்து வரும் இந்த அந்நிய ஆதிக்கநிலை பெண்கள் சமூகத்தை மிகவும் பாதித்துள்ளது.

ஐரோப்பியர்கள் தமது உச்ச இலாபத்தை முதன்மையாகக் கொண்டு செயற்பட்டார்களே தவிர நாட்டின் தேசிய நலனைப் பற்றி அவர்கள் அக்கறைப்படவில்லை.

இந்த வகையில் அவர்கள் பெருந்தோட்டப் பயிர்களான தேயிலை, இறப்பர், தென்னை உற்பத்திகளை மிகப் பெரியளவில் ஊக்குவித்தார்கள்; விருத்தி செய்தார்கள்; கொள்ளை இலாபம் ஈட்டினார்கள். ஆனால் எமது மக்களின் அத்தியாவசியத் தேவையைப் பூர்த்தி செய்கின்ற தேசிய உற்பத்தித் துறைகளான விவசாயம், விலங்கு வேளாண்மை, கடலுணவு உற்பத்தி ஆகியவை வீழ்ச்சியடைந்தன.

இத்தொழில்களில் ஈடுபட்டிருந்த பல்லாயிரக் கணக்கான பெண்கள் வேலையிழந்தனர்.

பனை வளங்களிலிருந்து மேற்கொள்ளப்படும் வெல்லம், ஓடியல், பனாட்டு, உற்பத்திகள் தடைப்பட்டன. இவ்வுற்பத்திகளை குடிசைக் கைத்தொழில்களாக செய்து வந்த பல்லாயிரக்கணக்கான பெண்கள் வேலையிழந்தனர்.

இப்பாதிப்புக்கள் இன்றுவரை தொடர்கின்றன. மாணவர்களுக்குக் கல்வியை இலவசமாக வழங்கும் முறை பெருமளவு பெண்களுக்கு கல்விவாய்ப்பினை வழங்கினாலும், அவர்கள் பெற்ற கல்வி அவர்களது பொருளாதாரத்தை முன்னெடுப்பதாகவில்லை.

ஐரோப்பியர் காலத்தில் தமிழர்களுக்கு ஏற்பட்ட உத்தியோக மோகம் இன்றுவரை தொடர்கிறது. எழுதுவினைஞர்களாக கணக்குதர்களாக, தட்டெழுத்தாளர்களாக பணிபுரிவதையே பெரும்பாலான பெண்கள் விரும்பி வேலைதேடி அலைகிறார்கள்.

எமது நாட்டின் தேசியப் பொருளாதாரக் கட்டமைப்பை வரைவதில் பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் படிப்படியாக வெற்றிகளை ஈட்டிவருகிறது.

இந்த வகையில், விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு பெண்களுக்கான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து பெருமளவு பணத்தை முதலீடு செய்து பெண்களுக்கான வேலைவாய்ப்பினை வழங்கி வருகிறது.

தமிழீழப் பெண்கள் இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி படித்தவர்கள், படிக்காதவர்கள் என்ற வேறுபாடின்றி இவ்வேலைத்திட்டங்களில் இணைந்து கொள்ள முன்வரவேண்டும். அவ்வாறு இணைந்து கொள்வதால் பெண் தனது பொருளாதாரத்தை முன்னேற்றுவதோடு நாட்டின் தேசிய பொருளாதாரத்தையும் வலுப்படுத்த முடியும்.

எமது மண்ணோடும், மண்ணின் வளங்களோடும் எமக்கிருக்கின்ற உழைப்பும் உணர்வுமே நிரந்தரமானவை. அது மட்டுமல்ல, எமது இனத்தின் தேசியத்தையும் தனித்துவத்தையும் வளர்த்தெடுப்பவையும் இவையே.

பெண்கள் தமது பொருளாதாரத்தை முன்னேற்றிக் கொள்வதற்குரிய பொருத்தமான திட்டங்களையோ, பெண் தொழிலாளர்களுக்கு அனுசரணையோ, தொழிலாளர் பாதுகாப்பு நலன் திட்டங்களையோ நிச்சயமாக தனியார் நிறுவனங்கள் விரும்பிச் செய்ய மாட்டாது. சட்டத்தினூடாகவே செய்விக்க முடியும்.

எனவே பெண்விடுதலைக்காகப் போராடும் பெண்கள் அமைப்புகள் பெண்களுக்கான வேலைத்திட்டங்களைத் தீட்டி பணத்தை முதலிட முன்வரவேண்டும். இச்சமயம் பெண்கள் கூட்டுறவு அடிப்படையில் தமது நலனுக்கான உதவித்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும்.

உதாரணமாக வேலை செய்யும் தாய்மார்களின் குழந்தைகளைக் கவனிப்பதற்காக குழந்தைகள் காப்பகத்தையோ அல்லது தாய்மார்களுக்கான சத்துணவுத் திட்டத்தையோ அல்லது பொது உணவகத்தையோ நிறுவ முடியும்.

பெண்கள் உழைப்பதற்குப் பின்னிற்காமல் உற்பத்திப் போரில் குதிப்பின் அவர்களாலும் நாட்டினது பொருளாதாரம் வளர்ச்சிபெறும் என்பது உண்மையே. ஆயினும், சிறிலங்காவினதும் ஏனைய ஏகாதிபத்திய நாடுகளின் நவீன ஆதிக்கத்தினதும் அழுந்த முனைகளை ஒடிப்பதற்குரிய பொருளாதார அறிவை விருத்தி செய்து கொள்வது என்பது பெண்கள் சமூகத்திற்கு மட்டுமல்ல முழுச்சமூகத்திற்கும் அவசியமான தொன்றாகவுள்ளது. □□

" இன்று மட்டும் அல்லாமல் என்றும் நிலைக்க வேண்டுமென்று ஓர் எழுத்தாளன் எழுதுகின்றவை எக்காலத்துக்கும் உதவாதவையாகிவிடும் "

பெர்னாட்ஷா —

# புரிந்துணர்வே அடித்தளமாய்

பூவோடு பிஞ்சும் போர்க்களம் காணும்
தேசத்தின் புத்திரியே!
உன்னோடு சில நிமிடம்.
எங்கள் தாயும், தாயவள் தாயும்
அல்லல்கள் சுமந்ததுவும்,
அடிமையாய் வாழ்ந்ததுவும்,
அடங்கி ஒதுங்கி நொந்து போனதும்,
நீ அறிந்ததே.
இருபதாம் நூற்றாண்டின்
இளைய மகள் நீ.
கூட்டுப் பறவையாய் நீயும் மடிவதா?
வேண்டாம்.
வான் முகட்டினை தொட நிமிர்ந்திடும்
வலிமை உன்னிடம்.
உலகின் உச்சியில் நின்று பாடிடும்
திடம் உன்வசம்.
அடிமைப் படுத்துகிறார்களே என்ற
ஆதங்கம் இனி வேண்டாம்.
அடிமையாய் ஏனுளோம் என்பதை யோசி.
அடங்கியிரோம் என்ற கோஷங்கள் வேண்டாம்.
ஆர்த்தெழுந்து செயலில் காட்டு.
புதிய தேசம் உருவாக கைகொடு.
பெண்மையே பேதமை,
என்ற வரன் முறை வகுத்தவர்
வாழ்ந்திட வழிதரார்.
வழியை நீ செய்.
மீட்பர் வருவரென காத்திருத்தல் வீண்.
விடுதலைக்கான பயணத்தைத் தொடங்கு.
பாதை கடினம் தான் தளராதே;
முன்னே செல்.
நிச்சயம் இலக்கில் பாதம் பதிப்பாய்.
தோழி!
இன்னும் சில வார்த்தைகள்......
சிந்தனையை விரிவாக்கு, சிறகுகளை அகல விரி,
விழிப்புணர்வே விவேகம்,
விரைந்து செயற்படு.
ஆணும் பெண்ணும் உலகின் இயக்கம்
புரிந்து கொள்.
புரிந்துணர்வே அடித்தளமாய்
புதிய சமுதாயம் விரைவாய் மலரட்டும்.
இவ்வளவே.
இனி வருங்காலம் உன்னிடம்
நன்றி.

— தமிழவள் —

கிளிநொச்சியில் பலசரக்குப் பொருட்களின்
மொத்த சில்லறை வியாபாரிகள்

## இரத்தினம் ஸ்ரோர்ஸ்

நெருக்கடிகள் நிறைந்த இந்த நாட்களில்
அத்தியாவசியமான பொருட்களைச் சேமித்து வழங்குவதில்

## இரத்தினம் ஸ்ரோர்ஸ்

கவனம் செலுத்துகிறது

நியாயவிலையில் அத்தியாவசியப் பொருட்களைப்
பெற்றுக் கொள்வதற்கு

## இரத்தினம் ஸ்ரோர்ஸ்

யாழ் வீதி, கிளிநொச்சி.

---

நோயற்ற பயிர்கள் குறைவற்ற பலனைத் தரும்

பயிர்வகைகளுக்கான உர வகைகள்
கிருமிநாசினிகள்
போன்றவற்றுக்கு

## சுபாஜினி றேடர்ஸ்

யாழ் வீதி, கிளிநொச்சி.

12

(12)


தரமான அரிசிக்கு
பெயர் பெற்றவர்கள்

நாகபூசணி அரிசி ஆலை

நாட்டரிசி
தரம் I க்கு மட்டும்

நாகபூசணி அரிசி ஆலை

ஒரு தடவை விஜயம் செய்யுங்கள்

நாகபூசணி அரிசி ஆலை

சீரணிச் சந்தி,
சண்டிலிப்பாய்.

---

மாவு அரைத்தல், நெல்குற்றல்
உழுந்து, பயறு திரித்தல்
போன்றவற்றுக்கு

ஸ்ரீ துர்க்கா கிறைன்டிங் மில்

சீரணிச்சந்தி,
சண்டிலிப்பாய்.